# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் □ இதழ் 18 □ சிறுவர் தேசம் (05) □ மே 04 - யூன் 04 □ ISSN 1474 - 8770





## இந்தியா மிளிருமா ?




யூன் 1 1981ல் பொதுநூலகம் எரிக்கப்பட்டது



தேர்தல் முடிந்தது மீட்பர்கள் மாறவில்லை

## தமிழ் மணமகன் இனவாதிகளால் கொல்லப்பட்டார்



அஸ்போர்ட், கென்றில் இனவாதிகளால் தாக்கப்பட்ட சங்கர் கதிர்காம நாதன் (24) மே 6 அதிகாலை காலமானார். ஏப்.22 மாலை KFC ல் வேலை முடித்து, தனது நண்பனுடன் வீடு திரும்புகையில் நிலத்தில் தள்ளி வீழ்த்தப்பட்டு தலையில் தாக்கப்பட்ட சங்கர் இரு வாரங்கள் உயிருக்காகப் போராடி மரணமானார். இக்கொலை தொடர்பாக 18, 22 வயதுடைய இரு வெள்ளையின இளைஞர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இவ்வாறான செயல்களை தடுக்க தான் எதுவும் செய்யத் தயார் என்றும் யாரோடு இணைந்தும் செயற்படத் தயார் என்றும் அஸ்போர்ட் ஈஸ்ற் கவுன்சிலர்.ஜோர்ஜ் குவாறி தெரிவித்து உள்ளார். இக்கொலையை அடுத்து சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்பான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது.

இது தொடர்பாக தேசம் சஞ்சிகையுடன் தொடர்பு கொண்ட சங்கருடைய சகோதரர் தனதும், தனது குடும்பத்தினரதும் அதிர்ச்சியை வெளியிட்டார். பிரித்தானியாவில் தமிழ் இளைஞர் ஒருவர் இனவாதிகளால் கொல்லப்பட்டது இது 2வது சம்பவமாகும். முதல் சம்பவத்தில் 1990களின் ஆரம்பத்தில் கிழக்கு இலண்டனில் தவறாக இனம் காணப்பட்டு தமிழ் இளைஞர் ஒருவர் இனவாதிகளால் கொல்லப்பட்டார்.

### இலங்கையர் மரணம்

வெம்பிளிபார்க் அன்டகிரவுண்ட் ஸ்ரேசனில் இருந்து வெளியே வரும் போது மே 2ல் தாக்கப்பட்ட நான்கு குழந்தைகளின் தந்தை வைபோல் பிரசன்னா(41) (படம்) மே 5ல் மரணமானார். தலையில் அடிபட்டதால் மூளை மரணம் அடைந்த நிலையில் அவரது உயிர்காக்கும் இயந்திரம் நிறுத்தப்பட்டது. இது தொடர்பாக கிறீன்போர்ட் கறுப்பினத்தவர் (38 வயது) கைது செய்யப்பட்டு, கொலைக் குற்றம் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இலங்கையில் உள்ள பிரசன்னாவின் குழந்தைகள் தொலைபேசியூடாக தந்தைக்கு இறுதி விடையளித்தனர். ரெயினில் ஒரு சிறுவனில் பிரசன்னா தட்டுப்பட்டார் என்றும் அதனால் அச்சிறுவனுடன் வந்த கறுப்பினத்தவர் பிரசன்னாவை தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மே16 ல் மற்றுமொரு சம்பவத்தில் குயின்ஸ்பறியில் உதைபந்து விளையாடிக் கொண்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவரை மூவராக வாக்குவாதத்தில் ஈடுபட்ட கறுப்பினத்தவர்களில் ஒருவர் முகத்தில் சுட்டுள்ளார். அதிஸ்டவசமாக இளைஞர் உயிர்தப்பினார். வாக்குவாதத்தின் பின் ஆள்மாறி சுடப்பட்டதாகத் தெரியவருகிறது.

### பொலிஸ் உசார் நிலையில்

தமிழ் இளைஞர்கள் மத்தியில் உள்ள வன்முறையைக் கட்டுப்படுத்த பொலிசார் உசாராக இருப்பதாக துணை ஆணையாளரும் தமிழ் குற்ற பிரிவுக்குப் பொறுப்பானவருமான ஸ்ரீபன் ஹவுஸ் தெரிவிக்கிறார். வன்முறைக் குழுக்கள், உறுப்பினர்கள் பற்றி ஓரளவு முழுமையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்னும் சில வாரங்களில் தமிழ் குற்றத் தடுப்பு இலக்கம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. அதையொட்டி செய்தியாளர் மாநாடு ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. பனை மரத்தின் பின்னணியோடு Tamil Crime Hotline இலக்கத்தை விளம்பரப்படுத்தும் சுவரொட்டிகளும் விளம்பரங்களும் வெளிவர உள்ளது.

மேலும் பொலிசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே நம்பிக்கையை வளர்க்கும் வகையில் பல நடவடிக்கைகளில் பொலிசார் இறங்க உள்ளனர். தமிழ் சமூகத்தில் இருந்து பொலிஸாருக்கு ஆட்சேர்க்கவும் ஆர்வம் காட்டப்பட்டு வருகிறது. தமிழ் விழாக்களில் பொலிஸ் அதிகாரிகள் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ள உள்ளனர்.

## தடுத்து வைப்பதும் திருப்பி அனுப்புதலும்

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டவர்களைக் கைது செய்வதும் திருப்பி அனுப்புவதும் வழமையாகிவிட்டது. ஏப்.10ல் தனது திருமணப்பதிவுக்கு உற்றார் உறவினர்களுடன் சென்ற தமிழ் இளைஞரை பிறன்ற் பதிவு அலுவலகத்தில் வைத்து குடிவரவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். டென்மார்க்கில் இருந்து வந்த மணப்பெண்ணையும் மணமகனையும் உள்ளே அழைத்துச் சென்ற அதிகாரிகள் மணமகனை அழைத்துச் செல்வதாக மணப் பெண்ணுக்கு தெரிவித்தனர். அதிர்ச்சி அடைந்த மணப்பெண் தகவலை உறவினர்களிடம் தெரிவித்தார். வாழ்த்துத் தெரிவிக்க வந்த சுற்றத்தார் வேதனையுடன் வீடு திரும்பினர்.

மேலும் பொலிஸில் கையெழுத்து வைக்கத் தவறுபவர்கள் அடுத்த கையெழுத்து தினத்தில் பிடித்து அனுப்பப்படுகின்றனர். தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு உள்ளவர்கள் சட்ட நிறுவனங்களுடன் தொடர்பில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். வாராவாரம் தடுத்து வைப்பதும் திருப்பி அனுப்புவதும் வேகமாகி வருகிறது.

தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் விடயத்தில் சட்ட நிறுவனங்களும் அகதி அமைப்புகளும் முழுமையாக செயலிழந்து உள்ளன. பாதிக்கப்படுபவர்களும் இறுதிவரை அக்கறை அற்றவர்களாகவே உள்ளனர் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.




நவ 8, 2003ல் ஓர்கிங்ரன் தடுப்பு மையத்தில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்ட ஒரு பெரியவர். இதில் தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களில் ஒரு வீதமானவர்கள் கூடக் கலந்து கொள்ளவில்லை.

உள்ளே :

தேசத்தின் பார்வை 01
மார்க்சிய சிந்தனைகளில் ஆர்வம் 02
அம்மனால் காப்பாற்றமுடியுமோ? 04
இந்தியத் தேர்தல் 05
எமது போராட்டம் எங்கு செல்கிறது? 05
தேர்தல் முடிந்தது மீட்பர்கள் மாறவில்லை 06
ஜேர்மன் எழுத்தாளர் சங்கம் 07
இலங்கை முஸ்லீம்கள் ~ சோனகர் 08
புலம்பெயர் சினிமா 10
மதவாதமும் அரசியலும் 11
புஸ்பராஜாவின் சாட்சியம் ~ அபத்தம் 12
இலண்டனில் வளர்ச்சி பெறும் பரதக் கலை 13
ஒரு குடம் பாலும் துளித் துளியாய் விஷமும் 14
பனை ~ யாழ் மேலாதிக்கத்தின் அடையாளம் 16
கார்ல் மார்க்ஸ் ~ உலகின் அதி உயர்ந்த சிந்தனையாளர் 17
நாம் புதைக்கப்படுபவர்கள் அல்ல விதைக்கப்படுபவர்கள் 21

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Siruvar Thesam : S Gauthaman
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# பிரதேச சாதிய முரண்பாடுகளுக்கு எதிரான போராட்டம் தொடர வேண்டும்

புலிகளுக்குள் ஏற்பட்ட பூகம்பம் ஓரளவு சாந்தம் அடைந்து உள்ளது. ஆனாலும் அது ஏற்படுத்திய அனர்த்தங்களும் தாக்கங்களும் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டு உள்ளது. இரு தரப்பினரும் பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்படாத வகையில் நடந்து கொண்டமை ஓரளவு பொறுப்பு உணர்வை வெளிப்படுத்தி உள்ளது. ஆனால் மழைவிட்டாலும் தூறல் நிற்கவில்லை என்பது போல் அங்கொன்றும் இங்கொன்றுமாக கொலைகள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. மரணங்கள் எல்லாம் வெறும் எண்ணிக்கை மட்டுமே என்ற அளவிற்கு மலினப்படுத்தப்பட்டு உள்ளது. இது மட்டு அம்பாறை மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்தி உள்ளது.

தமக்குள் ஏற்பட்ட கிளர்ச்சியை வி.புலிகள் இராணுவ ரீதியில் அடுக்குவார்கள் என்பதைப் பலரும் எதிர்பாத்தே இருந்தனர். ஆனால் மட்டு அம்பாறை மக்களின் உள்ளங்களையும் இதயங்களையும் வென்றெடுப்பதற்கு வி.புலிகள் கடுமையாகப் போராட வேண்டும். இதற்கு நவீனரக ஆயுத தளபாடங்கள் எந்த வகையிலும் உதவாது. தம்மிடம் சரணடைந்தவர்களையும் இயக்கத்தை விட்டு விலகிச் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களையும் எப்படி நடத்துகிறார்கள் என்பதைப் பொறுத்தே மட்டு அம்பாறை மக்களுக்கும் வி.புலிகளுக்கும் இடையிலான உறவு அமையும்.

இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி சிங்கக் கொடியை ஏற்றியதன் மூலம் தமிழ் மக்களின் இதயங்களை வெல்லவில்லை. எதிர்விளைவே ஏற்பட்டது. இந்நிலைக்கு மட்டு அம்பாறை மக்களை தள்ளக் கூடாது. ஆனால் யாழ் உலகத் தமிழ் ஊடகங்கள் திட்டமிட்ட முறையில் அதனைச் செய்ததாகவே மட்டு அம்பாறை புத்திஜீவிகள் கருதுகின்றனர். அவர்களது கருத்துக்கள் இன்னமும் ஆழமாகப் புதைக்கப்பட்டு வருகிறது.

பிரதேசவாதம், சாதியப் பாகுபாடுகள் இவை. எல்லாம் தமிழீழத்தில் (வடக்கு கிழக்கில்) இல்லை என்று வாதிடுவது கண்ணைக் கட்டிக் கொண்டு உலகம் இருட்டு என்று கூறுவதைப் போன்றது. ஏனைய சமூகங்களைப் போன்று எமது சமூகத்தினுள்ளும் பகை முரண்பாடுகளும் பகைமையற்ற முரண்பாடுகளும் காணப்படுகிறது. இந்த முரண்பாடுகளை அடையாளம் காணுவதும் அவற்றுக்கான தீர்வுகளைக் காணுவதும் இன்றியமையாதது. அன்றி இவ்வாறான முரண்பாடுகள் இல்லை என்று வாதிடுவது இந்த முரண்பாடுகளை மேலும் கூர்மைப்படுத்தி சிக்கலாக்குவதாகவே அமையும்.

விரும்பியோ விரும்பாமலோ கேணல் கருணாவின் கிளர்ச்சி பிரதேசவாதம் பற்றிய ஒரு விவாதத்தை ஆரம்பித்து வைத்து உள்ளது. பிரதேச வாதம் பற்றிய விவாதமும் அதற்கு எதிரான போராட்டமும் தொடர வேண்டும். தமிழ் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பிரதேசவாதம், சாதியம், பெண் விடுதலை போன்றவற்றுக்கான போராட்டம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். அது விடுதலைப் புலிகளுக்குள்ளும் மேற்கொள்ளப்படுவதுடன் புலிகள் மேற்குறிப்பிட்ட அம்சங்கள் தொடர்பாகத் தம்மை மீளாய்வு செய்து மக்கள் முன் சுயவிமர்சனம் செய்ய வேண்டும்.

இதனை விடுதலைப் புலிகள் செய்வார்களானால் மட்டு அம்பாறை மக்களின் உள்ளங்களையும் இதயங்களையும் இலகுவாக வென்றெடுக்க முடியும். மாறாக தூறல் நிற்கவில்லை என்றால் நம்பிக்கையின்மையும் அச்ச உணர்வுமே மலியும்.

## தோழர் சண்முகதாசன் நினைவு நிகழ்வு

# மார்க்சிய சிந்தனைகளில் ஆர்வம்

இங்கிலாந்தில் இடம்பெற்ற மே தின நிகழ்வு, தோழர் சண்முகதாசனின் நிகழ்வாக மே 3ல் கவுன்சுலோ யுனைடட் றிபோம்ட் சேர்ச் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 'கார்ள் மார்க்சின் வாழ்வும் போதனைகளும்', 'சண்முகதாசனின் கட்டுரைகள்' என்ற இரு நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தேசம் - சர்வதேச தமிழ் சஞ்சிகையும் மார்க்சியக் கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையமும் இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்தனர். இந்நிகழ்வில் தோழர் சண்னினுடைய மகளும் மருமகனும் கலந்து சிறப்பித்தனர். வெவ்வேறு அரசியல் பின்னணிகளில் இருந்தும் ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தியாவில் நக்சல்பாரிகள் என்று பொதுவாக அழைக்கப்படும் இடதுசாரி அமைப்புகளில் ஒன்றான 'மக்கள் யுத்தம்' அமைப்பின் உறுப்பினரான தோழர் வேலு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். தோழர் சண்னை தான் சந்திக்கவில்லை என்றும் அவரைப் பற்றி மிகவும் கேள்விப்பட்டு இருந்ததாகவும் அவர் தனது தலைமை உரையில் குறிப்பிட்டார். இறுதிவரை பாராளுமன்றப் பாதையை நிராகரித்து ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவாக இருந்ததை அவர் குறிப்பிட்டார். (1)



டொக்டர் எம் எஸ் தம்பிராஜா பேசுகையில் (படம்) இந்நூல்கள் வெகுஜன ஊடகங்களுக்காக எழுதப்பட்ட, சண்முகதாசனின் சில அடிக்குறிப்புகளே எனக் குறிப்பிட்டார். அரசு என்பது மக்களை ஒடுக்கும் சாதனம். இராணுவம் அதன் முக்கிய கூறு. எப்போது தமது நலன்களுக்கு ஆபத்து வரும் என்று நினைக்கிறார்களோ அப்போது அடக்குமுறை நிகழும் என்று மேற்கு நாட்டு அரசுகள் பற்றிய அப்பிப்பிராயத்தை டொக்டர் தம்பிராஜா வெளியிட்டார். மார்க்சியம் என்பது ஒரு பார்வை என்று குறிப்பிட்ட தம்பிராஜா உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் இலங்கை தொடர்பான முடிவுகள் தென்னிலங்கை மக்களை மட்டுமல்ல வடக்கு கிழக்கையும் பாதிக்கப் போகின்றன. அந்நிலையில் விடுதலை இயக்கங்கள் என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றன என்றும் கேள்வி எழுப்பினார். சண் சொல்லி விட்டுச் சென்றதோடு நாங்கள் நிற்க வேண்டும் என்பதில்லை. அதனை அடிப்படையாகக் கொண்டு மக்களை முன்னேற்ற வேண்டும் என்று கூறி அமர்ந்தார்.

அங்கு பேசிய ரி சோதிலிங்கம், வாசிப்பவர்களே புத்தகம் பற்றித் தீர்மானிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். விமர்சகர்கள் தங்கள் தளத்தில் இருந்தே விமர்சனங்களை வைக்கின்றனர் என்று தெரிவித்த சோதிலிங்கம், வாசிப்பவர்களுக்கு அவ்விடயம் பற்றி உள்ள அறிவைப் பொறுத்து அவர்கள் புரிந்து கொள்ளுதல் மாறுபடும் எனத் தெரிவித்தார்.

சண்முகதாசன் பாராளுமன்றப் பாதைக்கு வெளியே தான் தொழிலாளர்களுடைய நலன்கள் வென்றெடுக்கப்பட முடியும் என்பதில் எப்போதும் உறுதியாக இருந்ததை வி சிவலிங்கம் சுட்டிக்காட்டினார். தொழிலாளர் வர்க்கப் புரட்சிக்கு சிங்கள - தமிழ் தொழிலாளர் வர்க்கம் ஐக்கியப்படுவதன் அவசியத்தை சண் தீர்க்கதரிசனமாக தெரிவித்தார் என்று அங்கு குறிப்பிட்டார்.

யமுனா ராஜேந்திரன் பேசுகையில் சண்முகதாசன் மார்க்சிய அறவியலை வாழ்வியலாகக் கொண்டிருந்த மனிதர் என்று பாராட்டினார். ராஜேந்திரன் சண்முகதாசனின் நூல்களில் கூடிய கவனம் செலுத்தினார்.

பதிப்புரையில் இந்திய மார்க்சியக் கட்சிகள் பற்றிய சிவசேகரத்தின் கருத்தை முற்றுமுழுதாக நிராகரித்தார். "1963ல் கம்யுனிஸ்ட் இயக்கத்தில் உலகளாவிய முறையில் ஏற்பட்ட பிளவின் போது இந்தியாவில் ஏற்பட்ட உடைவு போலன்றி இலங்கையில் ஏற்பட்ட பிளவு அரசியற் தெளிவுமிக்கதாக அமைந்தது" என்ற கூற்று இந்திய மார்க்சியக் கட்சிகள் பற்றிய சிவசேகரத்தின் மேலோட்டமான பார்வையில் இருந்து வெளிப்பட்டது என்று ராஜேந்திரன் குற்றம்சாட்டினார்.

இஸ்லாம், இலங்கையில் மார்க்சியத்தின் தோல்விக்கு என்ன காரணம் போன்ற விடயங்கள் ஆராயப்பட வேண்டும் என்று ராஜேந்திரன் சுட்டிக்காட்டினார். இதே கருத்தை தோழர் வேலுவும் வெளிப்படுத்தினார். சண்முகதாசனின் நூலில் மலையகத் தமிழர்களின் இடப்பெயர்வு பற்றிய கட்டுரை ஆழமாக ஆராயப்படவில்லை என்றும் 'கள்ளத்தோணிகள்' போன்ற சொல்லாடல்கள்




(2)

சண்முகதாசனின் நிலைப்பாடுகள் பற்றிய கேள்வியை ஏற்படுத்தியதாகவும் தோழர் வேலு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய ராஜேந்திரன் மாஓவின் பண்பாட்டுப் புரட்சியில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதையும் பின்னாளில் தியனமென் சதுக்கத்தில் மாணவர்கள் கொல்லப்பட்டதையும் சுட்டிக்காட்டி மாஓ வாதத்தை கண்டனம் செய்தார். ரஸ்யாவின் வீழ்ச்சி சீனாவின் போக்கு என்பவற்றை மார்க்ஸிசத்தின் தோல்வியாகவும் இடதுசாரிகள் ஏகாதிபத்தியத்தின் மீது பழி போட்டுவிட்டு தாம் தப்பிக் கொள்வதையும் யமுனா சுட்டிக்காட்டினார்.

சண் மார்க்சிய லெனினிய மாஓ வாதி என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்று குறிப்பிட்டு தனது பேச்சை ஆரம்பித்தார் மு நித்தியானந்தன். 1965களில் சண்முகதாசனுக்கு நிகராக மார்க்சியக் கருத்துக்களைச் சொல்ல ஒருவரும் இருக்கவில்லை என்று குறிப்பிட்டார். இலங்கை, இந்திய மார்க்சியம் பற்றிய சிவசேகரத்தின் குறிப்பு அனாவசியமானது என்றும் ஆனால் எழுபதுக்களில் இந்தியாவில் கம்யுனிஸ்ட் நூல்களுக்கு தடை விதிக்கப்பட்டமையையும் இலங்கையில் அவை தாராளமாக தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார். புரட்சிகர இயக்கத்தை முன்னெடுத்த சண்முகதாசன் பேர்மிங்காமுக்கு இறுதிக் காலத்தில் வந்ததை தன்னால் விளங்கிக் கொள்ள முடியாது உள்ளதாகவும் தெரிவித்தார். சண்முகதாசனின் தொழிற் சங்க நடவடிக்கைகளை, சமகாலத்தில் வாழ்ந்தவர் என்ற வகையில் அங்கு பகிர்ந்து கொண்டார்.

இந்நூல்களை மட்டும் வைத்துக் கொண்டு தோழர் சண்முகதாசனை மதிப்பிட முடியாது என்று குறிப்பிட்டார் நா சபேசன். சண்முகதாசன் முன் வைத்த கருத்துக்களை மேலும் வளர்த்தெடுத்து வெளியே உள்ளவர்களை வென்றெடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். விவாதங்களை 1986க்குப் பின் நாங்களே அழித்து விட்டோம் என்று தனது பேச்சில் குறிப்பிட்ட நாவலன் இந்த நூல்கள் ஒரு நம்பிக்கை ஊட்டுவதாகத் தெரிவித்தார். (3)




இறுதியாகப் பேசிய பூலோகலிங்கம் புத்தக வெளியீடுகளுடனும் விமர்சனங்களுடனும் நின்றுவிடப் போகிறோமா? அல்லது ஒடுக்கப்பட்ட மக்களுக்காக சர்வதேச போராட்டத்தை நடத்தப் போகிறோமா எனக் கேள்வி எழுப்பினார். பாவற்காய் கசப்பானாலும் உடலுக்கு நல்லது அது போலவே மார்க்சிசமும், மக்களுக்கு மிகவும் நன்மையானது என்று மதனமோகன் தனது நன்றி நவிலலில் தெரிவித்தார்.

இறுதியில் சண் வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்ட 15 நிமிட விவரணச் சித்திரம் காண்பிக்கப்பட்டது. அரங்கம் விசன் மேக்கர்ஸ் தேசம் சஞ்சிகையுடன் இணைந்து இதனைத் தயாரித்து இருந்தனர். பூ சீவகன் இதனை நெறிப்படுத்தி இருந்தார். கார்ல் மார்க்ஸ் வாழ்ந்த வீடு, அவரது சமாதி, பேர்மிங்காமில் தோழர் சண்முகதாசன் வாழ்ந்த வீடு, அவரது வாழ்க்கைக் குறிப்பைக் காட்டும் நிழற்படங்கள், அவரது உடல் தகனம் செய்யப்பட்ட இடம் என்பவை காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது. நோர்வே தொலைக்காட்சிக்கு சண்முகதாசன் வழங்கிய செவ்வி, மருமகன் டொக்டர் எஸ் எம் தம்பிராஜா, அன்று இணைந்து போராடிய இடதுசாரிப் போராளி க தங்கவேல் ஆகியோரது சண்முகதாசனைப் பற்றிய குறிப்புகளும் அவ்விவரணத்தில் பதிவு செய்யப்பட்டு இருந்தது.❑ (4)




(1) டொக்டர் எம் எஸ் தம்பிராஜா உரையாற்றுகிறார்.

(2) ராஜேந்திரன், தோழர் வேலு, ரி சோதிலிங்கம், வி சிவலிங்கம்.

(3) மதனமோகன் நன்றி நவில்கிறார்.

(4) நா சபேசன் உரையாற்றுகிறார்.

(5) நாவலன் உரையாற்றுகிறார்.



# கனக துர்க்கை அம்மனால் காப்பாற்ற முடியுமோ ?

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய உறுப்பினர்கள் மத்தியில் இருந்த முறுகல்நிலை தீவிரமடைந்துள்ளது. கருணைலிங்கத்தின் தலைமையை கவிழ்ப்பதில் சிவக்குமார் அணி தீவிர முயற்சியில் ஈடுபட்டு உள்ளனர். மே 2 பொதுக்கூட்டத்தில் கருணைலிங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. நம்பிக் கையிலாப் பிரேரணைக்கான வாக்கெடுப்பை அன்றே வைக்க கருணைலிங்கம் தலைமையிலான செயற்குழு முயற்சி செய்தது. (அன்று சிவக்குமார் அணியின் உறுப்பி னர் பலம் குறைவாக இருந்தது.) ஆனால் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படாத விடயத்தை அன்று நிறைவேற்ற முடியாது என்று சிவக்குமார் அணியினர் வாதிட்டனர்.

அக்கூட்டத்தில் உறுப்பினரல்லாத சில இளைஞர்க ளும் கலந்து கொண்டதாகவும் அவர்கள் எதிரணியில் இருந்த சிலரால் வன்முறைக்குத் தூண்டப்பட்டார்கள் என்றும் கருணைலிங்ம் தெரிவித்தார். இதனை மறுத்த சிவக்குமார் அணி, கருணைலிங்கமே தனது நலன்களுக் காக உறுப்பினர்கள் அல்லாதவர்களும் பொதுக் கூட்டத்துக்கு சமூகமளிக்கலாம் என்ற விதிமுறையைக் முனனர் கொண்டு வந்ததாகத் தெரிவித்தனர்.

£50,000 பவுணக்கு உள்ளாக மட்டுமே நிதிப்புரள்வு இருந்த ஆலயத்தை கருணைலிங்கம் தனது தலைமை யின் கீழ் £500,000 ஆக உயர்த்தி இருந்தார். பல்வேறு சமூக நலத் திட்டங்களை மேற்கொண்டு இருந்தார். நேர்மையான செயற்திறன் மிக்கவர்கள் வரும்வரை இந்த நிர்வாகத்தை காப்பாற்ற தான் போராடப் போவதாக கருணைலிங்கம் கூறுகிறார். கருணலிங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுப் பட்டியலை படிக்கும் சிவக்குமார் அணியினர், இத்தொகைப் பணத்தை கருணைலிங்கத்தி லும் சிறப்பாக, 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற வகையில் நிர்வகிக்கக் கூடியவர்கள் என்பதை நிருபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

போல்ராஜ் போன்ற இளைஞர்கள் இன்று எதிரணியில் இருப்பது, ஈலிங் ஆலயத்தின் வளர்ச்சியால் வரண்டு போன இரு ஆலயங்கள் கருணைலிங்கத்துக்கு எதிரான தனிநபர் விரோதப் பிரச்சாரத்தில் மும்மரமாக ஈடுபட்டு வருவதும் கருணைலிங்கத்தின் தலைமைக்கு சவாலாக உள்ளது. தாயகத்துக்கு உதவுவது என்பது கருணை லிங்கத்தின் பலமான துருப்புச்சீட்டாக உள்ளது.

ஆனால் உறுப்பினர்களுக்கு இவையெல்லாம் ஒரு பிரச்சினையல்ல. அவர்கள் ஏற்கனவே ஏதோ ஒரு அணியில் நிற்பார்கள். அனைத்தும் தீர்மானிக்கப்பட்ட வாக்குகள். அவரவர் அணியில் நின்று சிந்திக்காமல், எத்தெரிவு மக்களுக்கு நன்மை பயக்குமோ அவரைத் தெரிவு செய்யாவிட்டால் ஆலயத்தை எந்தக் கனக துர்க்கை அம்மனாலும் காப்பாற்ற முடியாது.❑

SELECT
ESTATES & LETTINGS LTD
✓ SALES
✓ LETTINGS
✓ MAINTENANCE
✓ MORTGAGES

Professional Service
Rent Guarantee Scheme
Quality Tenants
Competitive Sales Commission
Mortgages Arranged
288 High Street North, Manor Park, London, E12 6SA
Tel : 020 8470 1500 Fax : 020 8470 9800 Mob : 07956 150 580
email : bose@selhouses.co.uk website : www.selhouses.co.uk

# எமது போராட்டம் எங்கு செல்கிறது

விஜி
பெண்ணிலைவாதி

தேசம் இதழில் பெண்கள் விடுதலை பற்றிய கருத்துக் கண்டேன். 'மண் விடுதலை அடையும் போது பெண் விடுதலை அடைவாள்' என்ற சுமதியின் நம்பிக்கை சிந்திக்கத் தூண்டியது. சமூகத்தின் எந்த ஒரு முன்னேற்றத்திற்கும் ஆண், பெண் இருவரினதும் பங்கு இன்றியமையாதது. ஆணும் பெண்ணும் சேர்ந்ததே சமூகம். ஒரு பகுதியினரை அடக்கி வைத்துக் கொண்டு இன்னொரு பகுதியினர் முன்னேற முடியாது. எமது சமூகம் சாதி, மதம், பொருளாதாரம், அரசியல் என எல்லாத் தளங்களிலும் அடக்கப்பட்ட ஒன்று. அதற்குள் பெண்ணின் மீதான அடக்குமுறை எங்கும் நீக்கமற இரண்டறக் கலந்து உள்ளது. இந்த 20 வருடப் போராட்டம் எமக்கு இதுவரை எந்த எந்த நன்மையையும் செய்யவில்லை. செய்யவும் முடியாது.

போராட்டத்தை கையில் எடுத்தவர்கள் எந்த தூர நோக்குமற்ற, சாதாரண மக்களின் மீதான அக்கறை எதுவுமற்றவர்கள். இவர்களது நோக்கம் மக்களின் வளமான வாழ்க்கையும் சந்தோசங்களும் அல்ல. துப்பாக்கியின் துணையுடன் தங்கள் அதிகாரத்தை நிறுவி, பல யுகங்களாய் நின்று நிலைபெற்ற எமது இனத்தை மந்தைகளாக்குவதே ஆகும். மக்கள் என்போர் தங்களுக்காகச் சாவதற்கும் ஊடகங்களில் தங்களைப் புகழ்ந்து தம்பட்டம் அடிக்கவும், தங்கள் கடமைகளை நிறைவேற்றவும் தான் என எண்ணிக் கொண்டு செயலாற்றுகின்றனர்.

இந்த இலட்சணத்தில் விடுதலை என்று எதை நீங்கள் கருதுகிறீர்கள். எமது விடுதலைக்குத் தேவை பயிற்சி பெற்ற ஆண், பெண் அணிகள் மட்டுமல்ல. நேர்மையும், தூரநோக்கும், அர்ப்பணிப்பும், வஞ்சனையற்ற பொதுத் தலைமையுமே ஆகும். பயிற்சி பெற்ற பெண்கள் அணியைப் பற்றி புலிகளில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து வெளியே கசியவிடப்பட்ட செய்திகள் ஆரோக்கியம் அற்றது. கொச்சைத்தனமானது. இது எமது போராட்டம் எங்கே வந்து நிற்கிறது என்பதனையே காட்டுகிறது. ஆயிரக் கணக்கான மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள் உண்மை என்னவென்று தேடும் சிந்தனை மாற்றத்தை பெறவேண்டும். இதில் ஒன்றும் கௌரவக் குறைச்சல் இல்லை. ஏனெனில் இலட்சக்கணக்கான மக்களுடன் தொடர்புடைய பிரச்சினை இது. சிந்தனை மாற்றத்திலேயே புதிய ஒரு சூழலுக்கான அடித்தளம் தங்கியுள்ளது. இதுவே இன்றைய யதார்த்தம் ஆகும்.

மேலும் சண் இராசையா கூறி உள்ள விடயங்கள் சில கேள்விகளை எழுப்புகின்றன.

1) எங்கள் போராட்டம் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்படும் நிலை வந்தது என்று எதை வைத்துக் கூற முடிகிறது? (மனித விரோத செயற்பாடுகளுக்காக அல்லவா எமது போராட்டம் பிரபல்யமடைந்து பயங்கரவாதமாக இனம் காட்டப்பட்டு உள்ளது.)

2) எந்த அரசியற் கட்சிகளை வைத்துக் கொண்டு எந்தப் பெரிய மாற்றத்தை நோக்கி எமது போராட்டம் எங்கு நகர்கிறது என்று ஒன்றும் புரியவில்லை.

3) வி.புலிகளின் தலைமையை கருணா பலவீனப் படுத்துவது துரோகம் என்றால் புலிகள் மற்றைய இயக்கங்களை அழித்தொழித்ததற்கு என்ன பெயர்?

இந்த விடுதலைப் போராட்டத்தால் உற்பத்தி செய்யப்பட்டவர் தான் கருணா. இது இத்துடன் முடியப் போகின்றதா என்ன? உண்மையான அடித்தளத்தில் வஞ்சனை அற்ற அர்ப்பணிப்போடு மக்கள் மீது நேசம் கொண்ட மக்களை நம்பும் ஒரு அமைப்பே வெற்றி அடையும்.

மனிதனை மனிதன் மதிக்கும் சக மனிதனின் துயரில் பங்கேற்கும் சக மனிதனுக்காகப் போராடும் உயர்ந்த பாரம்பரியம் எமது சமூகத்தில் உருவாகுமா? சமூகச் சீரழிவுகள் துடைத்தெறியப்பட்டு உலகில் பெருமையோடு வாழும் காலம் எமக்கு வாய்க்குமா? ❑

## இந்தியா மிளிர்கிறது ?

இந்தியத் தேர்தல் முடிவுகள் எதிர்பாராத விதத்தில் மீண்டும் காந்தி பரம்பரையை ஆட்சியில் இருத்தி உள்ளது. தமிழ் நாட்டில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க ஓர் ஆசனத்தைக் கூடப்பெறவில்லை. அவரோடு களம் இறங்கிய சுப்பஸ்ரார் ரஜனியும் மண்கவ்வினார்.

'இந்தியா மிளிர்கிறது' கோசத்துடன் களம் இறங்கிய பிஜேபி க்கு முகத்தில் அறைந்து உள்ளார்கள் இந்திய வாக்காளர்கள். 75 வீதமான இந்தியர்கள் நாளொன்றுக்கு 70p (US $1) இலும் குறைவான உழைப்பில் வாழும் போது இந்தியா மிளிர்கிறது என்ற கோசம் நளினமாக அமைந்து விட்டது. நகர்ப்புறங்களில் உள்ள நடுத்தர மேல்தட்டு வர்க்கத்துக்கும், செல்வந்தர்களுக்கும் இந்தியா மிளிர்கிறதே அன்றி கிராமங்களில் வாழும் இந்தியர்கள் உணவுக்கும், தண்ணிக்கும் போராட வேண்டி உள்ளது.

இத்தாலிய மருமகள் இந்த இந்தியாவை மீட்பாரா என்பது வெகுவிரைவில் தெரியவரும். சோனியா காந்தி தொடர்ந்தும் மக்களின் நம்பிக்கையைத் தக்க வைத்தால் பிஜேபியின் எதிர்காலம் கேள்விக்குறியாகும். அயோத்தி இராமர் கோவிலை வைத்துக் கொண்டு இன்னும் எத்தனை ஆண்டுகள் அரசியல் பண்ண முடியும். தவறான கட்சியில் உள்ள சரியான மனிதராகக் கருதப்படும் முன்னாள் பிரதமர் வாஜ்பாயால் இன்னும் சில ஆண்டுகளே அரசியல் செய்ய முடியும். அதன் பின் பிஜேபி ?❑



எஸ் பரமேஸ்வரி
விவரணப் படத் தொகுப்பாளர்

# தேர்தல் முடிந்தது மீட்பர்கள் மாறவில்லை

இலங்கையில் தேர்தல் முடிந்து அதற்குப் பின்னர் பல நிகழ்வுகள் இடம்பெற்றும் விட்டன. ஆனால் இந்தத் தேர்தலின் மூலம் மக்கள் என்ன செய்தியைக் கூற முயற்சிக்கிறார்கள் என்பது குறித்து பலவித அபிப்பிரா யங்கள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்கை பொறுத்தவரை தமிழ் தேசிய வாதத்தின் மீது கவர்ச்சி கொண்டவர்களாகவே கடந்த இரண்டு தேர்தல்களிலும் மக்கள் வாக்களித்துள்ளனர். தமிழ் தேசியவாதத்தின் போக்கு சரியா? பிழையா? என்பது குறித்து இங்கு நான் ஆராய வரவில்லை. மாற்று கட்சிகள் மற்றும் பெரும்பான்மை கட்சிகளுக்கும் ஓரளவு ஆதரவு இருக்கின்ற போதிலும் தமிழ் தேசியவாதத்துக்கு குறைந்தபட்சம் 75 வீத ஆதரவு வடக்கு கிழக்கில் இருக்கின்றது என்பதில் பெரும் முரண்பாடு இருக்க முடியாது.

ஆனால் இந்தத் தடவை நடைபெற்ற தேர்தலின் முடிவை மாத்திரம் வைத்துக்கொண்டு வடக்கு கிழக்கில் 99 வீதமான மக்கள் தமிழ் தேசியவாதத்துக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று கூறமுடியாது. உண்மை நிலை அப்படியும் இல்லை. ஏனெனில் வடக்கில் மாற்று அமைப்பான ஈ.பி.டி.பியினர் மற்றும் ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்ச்சை குழு ஆகியவற்றுக்கும் ஆதரவு இருந்தது. அதேபோன்று கிழக்கில் தமிழ் தேசியவாதத்தின் தலைவராகக் காட்டப்பட்ட ஜோசப் பரராஜசிங்கத்தின் தோல்வியை இங்கு மறுக்க முடியாது.

மேலும் இந்தத் தேர்தல் வடக்கு கிழக்கில் சுயாதீனமாக நடைபெறவில்லை என்று கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்து உள்ளன. இவற்றை அடிப்படையாக வைத்து பார்க்கும் போது குறைந்தபட்சம் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்களில் 25 வீதமாவது தமிழ் தேசியவாதத்துக்கு எதிராக வாக்களிக்க தயாராக இருந்தார்கள் என்ற உண்மையை மறுக்கமுடியாது.

அதுமாத்திரமன்றி வடக்கு கிழக்கில் தமிழ் தேசிவாதத்துக்கு ஆதரவாக வாக்களித்த மக்களில் பெரும்பான்மையினர் தமக்கு சமாதானத்தை தமிழ் தேசியவாதத்தினால் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையிலேயே அதற்கு வாக்களித்துள்ளனர் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

தமிழ் தேசியவாத தலைமைகளுக்கு வாக்களித்த வர்கள் விடுதலைப் புலிகளால் மாத்திரமே சமாதானத்தை கொண்டுவர முடியும் என்று நம்புகின்றனர். எதிர்த்து வாக்களித்தவர்கள் விடுதலைப் புலிகளை பலமிழக்க செய்யும் போதே சமாதானம் வரும் என்பதை நம்பி வாக்களித்துள்ளனர். வித்தியாசம் இதுதானேயொழிய, சமாதானம் தேவை என்பதில் வடக்கு கிழக்கு மக்கள் உறுதியாகவே இருந்தனர்.

அப்படியானால் தென்பகுதி மக்கள் எப்படி வாக்களித்தனர் என்ற கேள்வி அடுத்ததாக எழுகிறது. இதற்கு முன்பு நடந்த தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி கூட்டணி வெற்றி பெற்ற போது பல தமிழ் ஆய்வாளர்கள் சிங்கள மக்கள் எல்லோரும் போருக்கு எதிராக, சமாதானத்துக்கே முன்னுரிமை கொடுத்து வாக்களித்து உள்ளனர் என்றனர். அக்கணிப்பு எவ்வளவு தவறு என்பதை தற்போதைய தேர்தல் நிருபித்து உள்ளது.

இப்படிக் கூறுவதற்காக சிங்கள மக்கள் சமாதானத் துக்கு எதிராகவே வாக்களித்து உள்ளார்கள் என்பது பொருளல்ல. தென் பகுதி மக்களைப் பொறுத்தவரை தமக்கு சமாதானம் தேவை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தாலும் அதனை யார் தருவார்கள் என்பதில் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திர கட்சியும் முன்னணியில் திகழ்கின்றன. ஜே.வி.பி மூன்றாவது அணியாக திகழ்கின்றது. இவற்றுக்கு நிரந்தரமான வாக்கு வங்கிகள் இருக்கின்றன. இந்த வாக்கு வங்கியில் சேராமல் தேர்தலுக்கு தேர்தல் நிலைமைக்கு ஏற்ப கட்சியை மாற்றி வாக்களிக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கை அங்கு குறைவாகும். அடுத்தபடியாக தென் இலங்கையில் முக்கிய கட்சிகளாக இலங்கை தொழிலாளர் காங்கிரசும், முஸ்லிம் காங்கிரசும் திகழுகின்றன.

இதுவரை காலமும் ஜே.வி.பி முன்னணிக் கட்சிகள் இரண்டுடனும் சேராததால் இ.தொ.காவும், முஸ்லிம் காங்கிரசும் யாருடன் சேருகின்றனவோ அவற்றுக்கே அதிகப்படியான ஆசனம் கிடைப்பது வழக்கம். அந்த வகையில் கட்சிகளின் கூட்டணி எப்படி அமையுமோ அவர்களுக்கே வெற்றி வாய்ப்பு இருந்து வந்தது.

## இலங்கைத் தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | ஆசனங்கள் | வாக்குகள் |
|---|---|---|
| (SLFP + JVP +) | 105 | 45.6% |
| (UNP + ) | 82 | 37.8% |
| (TNA) | 22 | 6.8% |
| (JHU) | 9 | 6.0% |
| (SLMC) | 5 | 2.08% |
| (UCPF) | 1 | 0.5% |
| (EPDP) | 1 | 0.3% |

தற்போதைய தேர்தலில் இதுவரை மூன்றாவது அணியாக இருந்து எவருடனும் சேராமல் போட்டியிட்ட ஜே.வி.பி இந்தத் தடவை சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்டது.

இந்தத் தேர்தல் முடிவுகளை குறிப்பாக ஆராய்ந்தவர்களுக்கு ஒரு விடயம் புரிந்திருக்கும். அதாவது இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் நுவரெலியா, பதுளை மற்றும் தமிழ் மக்கள் அதிகம் வாழும் கொழும்பு மாவட்டங்களில் மாத்திரமே ஐக்கிய தேசிய கட்சி வெற்றிபெற்றது. கண்டியிலும் முஸ்லிம்களின் வாக்கு அதற்கு கிடைக்க அங்கும் அது பெரும்பான்மையை பெற்றது. ஏனைய அனைத்து தென்னிலங்கை மாவட்டங்களிலும் சிறிலங்கா சுதந்திர கட்சி, ஜே.வி.பி கூட்டணியே வெற்றிபெற்றது. அதிலும் குறிப்பாக நுவரெலிய மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பில் வெற்றி பெற்ற முதல் மூன்று வேட்பாளர்களும் தமிழர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே இந்த தேர்தலில் சிறுபான்மை மக்களின் வாக்குகளே ஐக்கிய தேசிய கட்சியை காப்பாற்றியுள்ளது.

ஆகவே தேர்தல் முடிவுகள் இங்கு போரா? சமாதானமா? என்ற கேள்வியின் அடிப்படையில் அல்லாமல் கட்சிகளின் கூட்டு மற்றும் அவற்றின் நிரந்தர வாக்கு வங்கி ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப் பட்டு இருப்பதை உணரலாம்.

அப்படியானால் ஜாதிக ஹெல உறுமய என்ற கட்சியின் கணிசமான முன்னேற்றம் எதனை காட்டுகிறது என்ற கேள்வியும் இங்கு எழுகிறது. ஜாதிக ஹெல உறுமயவினர் சிங்கள தேசிய வாதம் பேசுவதால் சமாதானத்துக்கு எதிரானவர்கள் அவர்களுக்கு வாக்களித்துள்ளனரா? என்ற கேள்வியும் இங்கு எழுகிறது. உண்மையில் அதற்கும் இல்லை என்றே பதில் கூற வேண்டி இருக்கும். இவர்களுக்கு ஓரளவுக்கு சிங்கள தேசிய வாதிகளின் வாக்குகள் கிடைத்திருக்கலாம். ஆனால் இவர்களுக்கு கிடைத்த பெரும்பான்மை வாக்குகள் சிறிலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஜே.வி.பி ஆகியவற்றின் மீதான அதிருப்தி வாக்குகளாகும்.

இந்த கட்சிகளின் கடந்த காலமும் இப்படியே இருந்து வந்துள்ளது. இதன் காரணமாகத்தான் கிராமப்புற சிங்கள இளைஞர்கள் மத்தியில் ஜே.வி.பிக்கு ஆதரவு வளர்ந்தது. இடதுசாரி தீவிரப்போக்கு கொண்டவர்களாக சிங்கள இளைஞர்கள் மத்தியில் அறிமுகமான ஜே.வி.பி அவர்களிடையே பெரும் வரவேற்பு பெறவும் முடிந்தது.

ஆனால் சுமார் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களைப் பொறுத்தவரை ஜே.வி.பி தொடர்பான அவர்களது அனுபவம் மோசமானது. கிளர்ச்சிக் காலத்தில் அவர்களது நடத்தையால் ஏற்பட்ட விளைவுகளை இவர்கள் மறக்கத் தயாராக இல்லை.

இந்த நிலையில் இக்கட்சிகள் மீது ஏற்பட்ட அதிருப்தியே ஜாதிக ஹெல உறுமயவுக்கு ஆதரவாக அமைந்தது. இந்த மூன்று கட்சிகள் மத்தியில் காணப்படக் கூடிய ஊழல் நடவடிக்கைகள் ஜாதிக ஹெல உறுமயவில் உள்ள மதகுருமாரிடம் இருக்காது என்று சிங்கள மக்கள் சிலர் நம்புகின்றனர். தமது மதகுருமார் தமது சோற்று பிரச்சினையை சரியாக புரிந்து கொள்வார்கள் என்று அவர்கள் நம்பினார்கள். அதுவே பிக்குமாருக்கு வெற்றியை கொடுத்துள்ளது. ஆனால் சிங்கள பேரினவாதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படும் பிக்குமாரின் போக்கு பின்னாளில் எப்படி அமையும் என்ற சந்தேகமும் இங்கு எழாமல் இல்லை.

ஆகவே மொத்தத்தில் இங்கு தமிழ் மக்கள் போர் வேண்டாம் சமாதானம் வேண்டும் என்று வாக்களித்திருக்க, சிங்கள மக்கள் தமக்கு சமாதானமே வேண்டும் என்ற நிலையில் இருந்து மாறாத போதிலும், வாக்களிக்கும் போது தமது அன்றாட வாழ்க்கை பிரச்சினைகளை முன்னிறுத்தி வாக்களித்திருக்கிறார்கள்.

ஆனால் இவர்கள் அனைவரும் தமது மீட்பர்களாக யாரை நம்புகிறார்கள் என்பதில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை என்பதும் உண்மையாகும்.❑

## ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம்

ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் ஏப்பிரல் 18ல் டுய்ஸ்போர்க் நகரத்தில் நடைபெற்றது. கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு சுயாதீனமாக இயங்கி வருகிறது. இதன் நிர்வாகசபை உறுப்பினர்களாக இவ்வாண்டு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர்.

போஷகர் : என் செல்வராஜா (நூலகவியலாளர்)

தலைவர் : வ சிவராசா (ஆசிரியர், மண்)

உப.தலைவர் : பொ ஸ்ரீஜீவகன் (தமிழ்மணி)

செயலாளர் : சி இராஜகருணா (ஆசிரியர், ஈழம்)

உப.செயலாளர் : கு ஞானக்குமரன் (கவிஞர்)

பொருளாளர் : இ சிறீஸ்கந்தராசா (எழுத்தாளர்)

# இலங்கை முஸ்லீம்கள் சோனகர்



முஹம்மது
எஸ்.ஆர்.நிஸ்த்தார்
சமூகவியல் ஆய்வாளர்

இனப்பிரச்சினைக்கான தீர்வுநோக்கி முன்னேறும் இந்த முக்கியமான வரலாற்றுக் கட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய நியாயமானதும் அரசியல் ரீதியில் மிக முக்கியமானதுமான (Politically crucial) விடயம் முஸ்லீம்கள் பற்றிய நிலைப்பாடு ஆகும்.

இக்கட்டத்தில் தெரிந்தோ தெரியாமலோ செய்யப்படும் தவறுகளும் செய்யத் தவறும் விடயங்களும் நாளைய அமைதியான ஒன்றுபட்ட இலங்கையில்; அல்லது சிங்களவர் தமிழர் சுயாட்சிப் பிரதேசங்கள் என்ற அமைப்புக்குள்; அல்லது ஸ்ரீலங்கா, தமிழீழம் என்ற இரண்டு இறைமையுள்ள நாடுகளில் இன்னுமொரு ஆயுதப் போராட்டத்தை தோற்றுவிக்கும்.

இன்று சிங்கள பேரினவாதம் (மறைமுக) தமிழ்ப் பேரினவாதம் என்பவை மாத்திரமல்ல வளர்ந்து வரும் தனி பௌத்த மதவாதமும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. உலகின் முதல் பிக்குகளாட்சி (Theocracy) ஆட்சிக்கான நாடிப்பிடிப்புகளையும் இந்த இடத்தில் மறுப்பதற்கில்லை. (ஆனால் தமிழரிடையே மதவாதம் வெளிப்படுவதற்கான அறிகுறி அரிதிலும் அரிதாகவே காணப்படுகின்றது).

இலங்கை முஸ்லீம்கள் இன அடையாளம் இல்லாமல் மத அடையாளத்திலேயே தமது அரசியலை நடத்த விரும்பினால் பல இனங்கள் வாழும் நாட்டில் மாறுபட்ட சூழலிலுள்ள ஒரு நாட்டில் அதிலும் நாம் சிறுபான்மையினரிலும் சிறுபான்மையாய் வாழும் நாட்டில் சர்வதேசங்களின் கவனம் அதிகரித்து வரும் ஒரு நாட்டில் அது நமது இருப்பையே கேள்விக்குறியாக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

உதாரணமாக விடுதலைப் புலிகளின் முஸ்லீம்கள் தொடர்பான நிலைப்பாட்டை நோக்கும் போது அதில் சந்தர்ப்பவாதம் இழையோடுவதை இலகுவாகக் காணலாம். அவர்களில் தமிழ் பேசும் மக்கள் என்ற நிலையை விடுத்து இப்போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் முஸ்லீம்களை ஒரு கலாச்சாரக் குழுவாக ஏற்றுக் கொள்வதாகக் கூறியுள்ளார்.

இந்தக் கலாச்சாரக் குழு என்ற சொற் பிரயோகம், தமிழ் பேசும் மக்கள் என்பதை விடவும் குறைவான நிலை. ஒரு மக்கள் கூட்டத்தில் பல வகையான கலாச்சாரங்கள் பின்பற்றப்படலாம். ஒருவன் உணவு உண்ணும் முறையிலிருந்து நாட்டை நிர்வகிக்கும் விடயங்கள் வரை பலவிதமான கலாச்சாரப் போக்குகளை கடைப்பிடிக்கலாம். இனம் என்ற பரந்த பரப்புக்குள் கலாச்சாரம் என்பது ஒரு சிறு பகுதியே. சரி ஒரு பேச்சுக்காக கலாச்சாரக் குழு என்பதை ஏற்றுக் கொண்டாலும் அக் குழுவின் நிலை என்ன, உரிமைகள் என்ன என்பதற்கு இன்னும் விடை கொடுக்கப்படவில்லை.

இதைவிடவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இலங்கை முஸ்லிம்கள் ஒன்றுபட்டு ஒரு தலைமையின் கீழ் வரவேண்டும் அதன் பிறகு அவர்கள் தனியான குழுவாக (Entity) பேச்சு வார்த்தை மேசைக்கு வரலாமா என்பது பற்றித் தீர்மானிக் கலாம் என்று கூறியது மிகவும் அவதானத்துக்குரியது.

ஆலோசகர் பாலசிங்கத்தின் அரசியல், கூட்டல் கழித்தல் படி 'இலங்கை முஸ்லீம்கள் பரம்பரை பரம்பரையாக ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்ந்த அரசியல் நடத்தியவர்கள். 1990களில் துடிப்போடு முன்னேறிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) அதன் ஸ்தாபக தலைவர் மறைந்த அஷ்ர.'.ப்பின் திட்டமிட்ட கொலையின்பின் துண்டு துண்டாகி முஸ்லிம்களின் அரசியல் குரல் அஸ்தமிக்க ஆரம்பித்து விட்டது' என்பதாகும்.

'இலங்கை முஸ்லிம்கள் தனியான பிரிவினர் எனவே நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முன்னெடுப்புகளில் அவர்கள் பங்குகொள்ள வேண்டியது அவசியம். அதை விடுதலைப் புலிகளாகிய நாங்கள் உத்தரவாதப்படுத்துகிறோம். ஆகவே முஸ்லிம்கள் அதற்கான அதிகாரத்தை அவர்கள் விரும்பும் தலைமைக்கு அல்லது கட்சிக்குக் கொடுக்கலாம்' என்று

பாலசிங்கம் கூறி இருந்தால் அதில் சந்தேகிக்க எந்த விடயமும் இல்லை. இதைவிடுத்து முஸ்லிம்கள் முதலில் ஒன்றுபடுங்கள் (ஒன்றுபடமாட்டார்கள் என்பது அவரது எதிர்பார்ப்பு) அப்புறம் மிகுதியைப் பார்க்கலாம் என்பது இனப்பிரச்சினையின் சமாதானத் தீர்வு பேச்சுவார்த்தை களில் முஸ்லீம்களுக்குத் தனியிடம் இல்லை என்பதற் கான முன் அறிவிப்பாகும்.

இந்த இடத்தில் கலாநிதி சித்தீக்கின் கூற்றொன்றும் சாலப்பொருந்தும். அதாவது முஸ்லிம்களை விட மிக அதிகமாக தமிழர்களே இன்று பிரிந்து காணப்படுகின்றனர். அவர்களின் பிரிவை பத்துக்கும் மேற்பட்டதாக அடையா ளங் காணலாம் என்பதாகும். ஆக, இங்கு எத்தனையாக யார் பிரிந்துள்ளனர் என்பது பிரச்சினையல்ல. பேச்சுவார்த்தைக்கு யார் தகுதியான பிரிவினர் என்பதே முக்கியம். அரசதரப்பு, தமிழர்களே முதலில் ஒன்று படுங்கள். அப்புறம் மீதியைப் பார்க்கலாம் என்றால், போர் தொடருமே தவிர அருமையான இந்தச் சமாதான ஒப்பந்த சூழல் இன்று இருந்திருக்காது. என்றும் இருக்காது. ஏனெனில், ஜனநாயக ரீதியில் விடுதலைப் புலிகளின் தலைமையின்கீழ், தமிழர் எல்லோரும் ஒன்றுபடுவதென்பது நடக்க முடியாத விடயம்.

இலங்கையில் முஸ்லிம் என்ற சமயவழிப் பதப்பிரயோகம் இலங்கையின் எதிர்கால அரசியலில் அவர்களை ஒரு தேசிய இனத்தின் அந்தஸ்திலிருந்து கீழிறக்கிவிடும். ஆகவே அவர்கள் தமது இனத்தின் பெயரை தூசுதட்ட வேண்டும்.

இலங்கை முஸ்லீம்கள் சமய அடையாளத்தினூடே அரசியலில் செயற்பட விரும்பினால் நாளை சிங்கள இனத்தின் கிறிஸ்தவர்களும் தமிழினத்தின் கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர்களின் சிறுசிறு சமயப் பிரிவினரும் (Cult), ஏன் முஸ்லீம்களின் உட்பிரிவினரும் கூட தங்கள் இருப்புக்கான சட்ட அங்கீகாரம் கோரலாம். இலங்கையின் இன்றைய கிறிஸ்தவர், சிங்கள பௌத்தர்க ளின் உன்னிப்பான அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனர். சமயரீதியான நெருக்குவாரங்கள் கிறிஸ்தவர் களுக்கு அதிகரிக்கும் போது அதற்கான நிவாரணமாக முஸ்லீம்களுக்கான பிரத்தியேக ஏற்பாட்டை கிறிஸ்தவர் களும் கோரலாம்.

விடுதலைப் புலிகளும் கூட முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகளைத் தட்டிக் கழிக்க தமிழ் கிறிஸ்தவர்களைக் காரணம் காட்டி தமதாட்சியில் ஒரு சமயப் பிரிவினருக்கு மாத்திரம் பிரத்தியேக சலுகை தரஇயலாது எனலாம். நிலைமையை தங்களது அடக்குமுறைக்குச் சாதகமாகவும் பயன்படுத்தலாம்.

இதையெல்லாம் விட மிகப் பயங்கரமான விடயம், விடுதலை புலிகள் முஸ்லிம்களுக்கு எதிரான வெளிநாட்டு சக்திகளுடன் கூட்டுச் சேரலாம். அதிலும் விஷேடமாக அமெரிக்காவுடனோ அல்லது இஸ்ரேலுடனோ அல்லது இரண்டு நாடுகளோடும் சேர்ந்து இலங்கை முஸ்லீம்களை இஸ்லாமியப் பயங்கரவாதிகள் என்று பெயரிட்டு மிக இலகுவாக ஓரங்கட்டி விடலாம். இது அதீத கற்பனை அல்ல. ஏகாதிபத்தியவாதிகளினதும் பேரினவாதிகளினதும் கைவந்த கலை. விடுதலைப் போராட்டம், பயங்கரவாதம், நாட்டு நிர்மாணம், உலக ஒழுங்கு, நாகரீக உலகு என்ற பதப்பிரயோகங்கள் அவரவர்களின் நலன் கருதியே பொருள் வழங்கப்படும்.

ஆகவே நாம் நமது இனப்பெயரில் அரசியல் நடத்துவதே அரசியல் சாணக்கியமாகும் (Political manoeuvring). நமது இனத்தின் பெயர் நமது பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் மிகத்தெளிவாகத் தெரியப்படுத் தப்பட்டு உள்ளது. சிங்களத்தில் "யோனக்க" என்றும், தமிழில் "சோனகர்" என்றும் ஆங்கிலத்தில் "மூர் (Moor)" என்றும் எழுதப்பட்டு உள்ளது. இது எமக்கு இழுக்கல்ல. இது ஒரு காரணப் பெயர். எந்த இனமும் தூய்மையான இனமல்ல. அதனால் மாசுபட்டவர் என்ற பொருளல்ல.

நாம் ஒரு கலப்பினம். ஒன்றில் தமிழ்நாட்டில் காயல்பட்டினம், கீழ்க்கரையில் இருந்து வந்த அரபுக் கலப்புடைய தந்தையருக்கும் இலங்கையின் பெரும்பாலும் தமிழ்த் தாய்மாருக்கும் அல்லது நேரடி அரபுத் தந்தையர்களுக்கும் உள்ளூர் தமிழ், சிங்களத் தாய்மார் களுக்கும் அல்லது அரபு கிழக்கு ஐரோப்பியக் கலப்பில் வந்த தந்தை வழியினருக்கும் உள்ளூர் சிங்களத் தமிழ்த் தாய்மாருக்கும் அல்லது மேற்சொன்ன தந்தைவழி வட ஆபிரிக்கக் கலப்பில் தந்தை வழியினருக்கும் உள்ளூர் தமிழ் சிங்களத் தாய்மார்களுக்கும் இடையே ஏற்பட்ட உறவில் அல்லது திருமணப் பந்தத்தின் வழிவந்தவர்கள் இலங்கைச் சோனகர்கள்.

இந்தச் சோனகர் என்போர் இலங்கையில் மாத்திரம் அல்ல, மொரோக்கோ, தமிழ்நாட்டின் சில பகுதிகள் பிலிப்பைன்ஸ் ஆகிய இடங்களிலும் வாழ்வதால் இலங்கையில் உள்ளோர் இலங்கைச் சோனகர் (Ceylon Moor) என அழைக்கப்படுகின்றனர்.

இலங்கைச் சோனகர்களின் இருப்பு, இஸ்லாம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும் முன்பு அல்லது அதன் சமகாலத்தில் ஏற்பட்டது என்பது வரலாறு. ஆக, சோனகர் என்பதை இஸ்லாத்துடன் முழுக்க முழுக்கத் தொடர்புபடுத்தி தமிழரில் இருந்தும் சிங்களவரில் இருந்தும் மதமாற்றம் பெற்றோர் எனச் சில இலண்டன் வானொலிகளும் தமிழ்ப் புத்திஜீவிகளும் கூறிவருவது நிரூபிக்கப்பட முடியாத வரலாற்றுப் பிழை. இலங்கைச் சோனகரின் தோற்றமும் வாழ்வும், அதன் மொழி, கலாச்சாரத் தாக்கங்கள், ஐரோப்பியப் படையெடுப்புக் காலங்களில் அந்த இனம் நாட்டுக்கு ஆற்றிய சேவை என்பன எல்லாம் நீண்ட வரலாறு ஆகும்.

ஆக, இலங்கைச் சோனகர் என்போர் தனித்தவொரு இனம். அவர்கள் ஒரு தேசியம் (Nation). அந்தத் தேசியம் தனது விவகாரங்களைத் தானே கவனிக்கும் சுயநிர்ணய உரிமை (Right to Self Determination)

அதற்குண்டு. தேவைப்படின், நிபந்தனைகளுடன் கூட்டுச் சேரவும் (இதுதான் விடுதலைபுலிகள் - முஸ்லிம் காங்கிரஸ் வன்னிச் சந்திப்பும் ஒப்பந்தமும் என்றால் பாராட்டப்பட வேண்டியதே) தனியே பிரிந்து செல்லவும் அதற்கு உரிமையுண்டு.

இந்த உரிமையைத்தான் இதுவரை காலமும் இலங்கையின் பேரினவாத அரசுகள் சிறுபான்மையினருக்கு, குறிப்பாக இலங்கைத் தமிழருக்கு கொடுக்க மறுத்து வந்தனர். இப்போதும் மறுக்க முயல்கின்றனர். சுயநிர்ணய உரிமையை தமிழர் தரப்பு சோனகர்களுக்குத் தரமறுத்தால் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை நியாயமற்றதாகிவிடும். அது அவர்களுடைய போராட்டத்தினை போலியாக்கிவிடும்.

மேலும் ஏதாவது ஒரு இடத்தில் இனசுத்திகரிப்பு (Ethnic Cleancing) என்றால் சற்று நின்று உலக நாடுகள் அப்படியா என்று கேட்கின்றன. அதற்கு எதிராக ஏதாவது செய்ய வேண்டுமென முன்வருகின்றன. புயல் என்றால் வெள்ளம் என்றால் பூகம்பம் என்றால் நோய் என்றால் உதவ முன்வரும் நாடுகள் கூட ஒரு சமயத்தவருக்கு பிரச்சினை என்றால் அடிப்படைவாதிகளாக இருக்க வேண்டும் அல்லது பயங்கரவாதிகளாக இருக்க வேண்டும் என்ற ரீதியில் உதவ முன்வருவதில்லை. மாறாக பாதிக்கப்பட்ட மதத்தவருக்கு எதிரானவருக்கு கை கொடுத்து உதவுகின்றன. இதில் உள்நாடு வெளிநாடு என்ற பேதமெல்லாம் கிடையாது.

இவை அனைத்தையும் நாம் கவனத்தில் கொண்டால், உலகின் சமகாலப் போக்குக்கேற்பவே எமது உரிமைகளைப் பெறவும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவும் முடியும். சமயம் என்ற போர்வைக்குள் எமது அரசியலுக்கு பலம் சேர்க்க முயலலாம். ஆனால் இனம் என்ற வலுவான அடித்தளத்தில் இருந்து நமது கோரிக்கைகள் பிறக்க வேண்டும் என்பது எனது வாதம்.❑

# புலம்பெயர் சினிமா

## பருவம் அடைவதற்கு சில யோசனைகள்

1. விபரம் அறியாப் பருவத்திலிருந்து உங்கள் இரத்தத்தில் கலந்து விட்ட தமிழ்நாட்டுத் தயாரிப்புகளிலிருந்து வெளியே வாருங்கள். சர்வதேச ரீதியில் பாராட்டுப் பெற்ற வேற்று மொழிப் படங்கள் நீங்கள் இருக்கும் பிரதேசத்தில் உள்ள நூலகத்தில் கிடைக்கலாம். அவற்றை பார்வையிட்டால் உங்களிடம் புதிய ஊற்று சுரப்பதற்கு வாய்ப்புண்டு. நல்ல சினிமாவின் இலக்கணங்களை அங்கே தான் அறிவீர்கள்.

2. தமிழ் நாட்டிலிருந்தும் கூட அருமை பெருமையாக வரும் நல்ல படங்களைப் பாருங்கள். அவர்கள் அவற்றைக் கலைப் படங்கள் என்கிறார்கள். அந்த இடம் (space) உங்களுக்குப் போட்டியில்லாத இடம். உங்களது படைப்புத் திறனை நன்றாக அங்கே வெளிப்படுத்துங்கள். "காதல் கொண்டேன்" உடன் போட்டி போட உங்களால் முடியாது. அவற்றுடன் போட்டிபோடுவது வெட்டி வேலையும் கூட.

3. உங்கள் தயாரிப்பை நன்கு திட்டமிடுங்கள். Home Work செய்யாமல் தெருவில் இறங்காதீர்கள். நீங்கள் எடுக்கப் போகும் ஒரு காட்சியை பாலசந்தர் எப்படி எடுத்திருப்பார், பாரதிராஜா எப்படி எடுத்திருப்பார், பாலு மகேந்திரா எப்படி எடுத்திருப்பார் நான் எப்படி எடுக்கப் போகிறேன் என்று கொஞ்சம் கற்பனை செய்யுங்கள். உங்களுக்கு உள்ளே ஒழிந்திருக்கும் இன்னொருவர் எப்படி எடுப்பார் என்று கேட்டுப் பாருங்கள். தனக்குள்ளே சண்டையிடாத எந்தப் படைப்பாளியும் வரலாற்றை வென்று நின்றதில்லை. நீங்கள் தீர்மானித்ததைவிட இன்னும் சிறப்பாக எப்படிச் செய்யலாம் என்று தொடர்ந்து கேளுங்கள். தேவையின்றி ஒரு காட்சியைக்கூட அநாவசியமாகச் சேர்க்காதீர்கள்.

4. யாழ்ப்பாணத்தில், மட்டக்களப்பில் கிடையாத தொழில்நுட்பங்கள் உங்கள் ஊரில் (லண்டனிலோ பாரிசிலோ) கிடைக்குமே? தொழில்நுட்பத்தில் பின்நிற்கும் மூன்றாம் உலக மனோபாவத்தை எடுத்து எறியுங்கள். எவ்வளவு தூரம் நல்ல தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியுமோ அதைப் பயன்படுத்துங்கள். இரண்டு நிமிடம் கழித்துவரும் வசன ஒலிப்பதிவுக்கு பார்வையாளரிடம் மன்னிப்புக் கேட்டாலும் உங்கள் திறமை ஏளனத்துக்குள்ளாக வாய்ப்புண்டு.

5. "காமிரா எழுதிய கவிதை" என்று எங்காவது கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? ஆயிரம் வசனங்களில் சொல்வதை ஒரு புகைப் படம் சொல்ல முடியும் என்பார்கள். பார்வையாளர் பார்த்தவுடன் புரிந்து கொள்ளக்கூடிய சிறிய விஷயத்தைக்கூட பத்தி பத்தியாக வசனத்தில் புரியவைக்கிறேன் என்று அவர்கள் காது புளிக்க வைக்காதீர்கள். பாலேந்திராவின் நாடகத்திற்கும் பாலுமகேந்திராவின் படத்திற்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா என்ற சிந்தியுங்கள்.

6. ஆங்கிலத்தில் subtitle போடுங்கள். உங்கள் நாடுகளில் இருக்கும் சிறிய Film Clubகளுக்கு உங்கள் திரைப்படத்தின் பிரதியை அனுப்பி வையுங்கள். ஒருநாள் நீங்கள் ஒரு சர்வதேசப் பரிசைப் பெற்றாலும் பெற்றுவிடலாம். யார் கண்டது? வானத்தைக் குறி வைத்துப் பாருங்கள் பனை உயரத்துக்கேனும் பார்வை போகாதா என்ன?

மா ஜெயக்குமார் – சினிமா விமர்சகர்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

தமிழ் இயக்கங்கள் இஸ்லாமிய மத எதிர்ப்பும் மாற்றுக் கருத்துச் சகிப்பின்மையும் கொண்டிருந்த அளவுக்கு கிறிஸ்தவ மதத்தின்பால் எதிர்ப்பை வெளிக் காட்டவில்லை. சைவமும் தமிழும் ஒன்று என ஈழவேந்தன் போன்ற இந்து-தமிழ் அரசியல்வாதிகள் கிளப்பிய போக்குகள் அப்போது முன்னணிக்கு வரவில்லை.

அரசு போர்க்காலத்தில் இந்துக் கோவில்களை அழித்த போது அது தமிழின விரோத நடவடிக்கை யாகவே கொள்ளப்பட்டது. பல கிறிஸ்தவ மதகுருமாரும் கிறிஸ்தவ மத அமைப்புகளும் தமிழ்த் தேசிய விடுதலை யின் முக்கிய அனுதாபிகளாகவும் பங்காளர்களாகவும் இருந்திருக்கின்றனர். சர்வதேச அனுதாபத்தை தமிழ் மக்களின் பக்கம் திருப்புவதில் அவர்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றி உள்ளனர். தமிழரசுக் கட்சியிலும் சா.ஜே.வே. செல்வநாயகம், நாகநாதன், செல்லத்தம்பு, அழகக்கோன், அரியநாயகம் போன்றவர்கள் கிறீஸ்தவர்களாக இருந்த போதிலும் பெரும்பான்மைத் தமிழ் மக்களால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தழுவினார்கள்? 1970களில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மீண்டும் சாதியக் கொடுமைகளால் பாதிப்படைந்து பௌத்த மதத்திற்கு ஏன் மாறினார்கள்? இந்திய தலித்துகள் ஏன் பௌத்தம் மற்றும் இஸ்லாமிய மதங்களைத் தழுவினார்கள்? இதற்கு இந்து சமயத்தின் காலத்துக்கு ஒவ்வாத கருத்தியல் காரணமில்லையா? மூலத்தை விட்டு, காரண காரியங்களை உதாசீனம் செய்துவிட்டு விளைவுகளின் பின்னால் மட்டும் நாம் ஓட முடியாது.

தீவிர கிறிஸ்தவ மதவாத அமைப்பான ஜகோவா உலகில் கிட்டத்தட்ட ஆறு மில்லியன் பேரை உறுப்பினரா கக் கொண்டு உள்ளது. 1870களில் ஐரோப்பிய நாடுகளில் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதவாதிகளின் அநியாயம் தாங்க முடியாமல் புது உலகமான அமெரிக்காவுக்குத் தப்பியோடினார்கள். அங்கு வேரூன்றினார்கள்.

இன்று இவர்கள் அமெரிக்காவில் பிரம்மாண்டமான நிதி வளங்களையும் கட்டிடங்களையும் அச்சு வசதிகளை யும் கொண்டு உள்ளனர். ஐரோப்பாவில் இப்போது

# மதவாதமும் அரசியலும்

தமிழரசன் (பெர்லின்)
சமூகவியல் ஆய்வாளர்

ஜி.ஜி.பொன்னம்பலம், சி.சுந்தரலிங்கம் போன்றோர் 'செல்வநாயகம் வேதக்காரன்" என்று இந்து மத வெறியைக் கிளப்பிய போதும், அது வெற்றி பெறவில்லை. காங்கேசன்துறைத் தொகுதியில் சா.ஜே. வே.செல்வநாயபகத்தை எதிர்த்துப் போட்டியிட்ட சி. சுந்தரலிங்கம் "வேல் வேண்டுமா? சிலுவை வேண்டுமா?" என்ற வெளிப்படையாக மத உணர்வுகளைக் கிண்டிய போதும் அவர் தோல்வியையே அடைந்தார். இதே சி. சுந்தரலிங்கமே பின்னர் தமிழர்களுக்குத் தனிநாடு வேண்டும் என்று 1960களில் கோரியவரும், 'தமிழ் ஈழம் எங்கள் தெய்வம்' என்ற நூலை எழுதியவருமாவார்.

இலங்கையில் மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டுவர வேண்டியதற்குக் காரணமாக கிறிஸ்தவ உதவி நிறுவனங் கள் ஜகோவா போன்றவற்றைக் காட்ட விரும்புகின்றனர். மதம் மாறிய சிறுசிறு சம்பவங்களை பிரம்மாண்டமாக உருவகிக்கின்றனர். இவை தனியே கிறீஸ்தவ மத அமைப்புகளின் வலிந்த கட்டாயச் செயற்பாடு என்று இந்து மதவாதிகள் காட்ட முயல்கின்றனர்.

ஆனால் மக்கள் மதம் மாறுவதற்குத் தூண்டும் வேறுசில காரணிகள் இருந்திருக்க வேண்டும். போர்க்கால நிலைமைகள் அவர்களை அவ்வாறு தூண்டியிருக்கக் கூடும். அந்நியர் ஆட்சிக் காலத்தில் சாதியக் கொடுமைக ளுக்கு உள்ளான மக்கள், கிறிஸ்தவ மதத்தை ஏன்

தீவிரமாக இயங்கும் மதக்குழுவாக உள்ளனர். இவர்கள் வருடாவருடம் பல மொழிகளில் பல மில்லியன் பைபிள் நூல்களை அச்சிட்டுப் பரப்பகின்றனர். காவற்கோபுரம் போன்ற மாதச்சஞ்சிகைகளை உலகிலே 87 மொழிகளில் வெளியிடுகின்றனர். நவீன தொழில்நுட்பம், தொழில்நுட்பம் சார்ந்த வாழ்வு இவைகளே உலகின் பசி, யுத்தம், உட்பட்ட சகல பிரச்சினைகளுக்கும் காரணம் என்று பிரச்சாரம் செய்வதுடன் ஜெகோவாவின் அமைதியான பழங்காலப் பொற்கால வாழ்வுக்கு திரும்ப அழைப்பு விடுகின்றனர். மனிதர்கள் இன்றைய விஞ்ஞான அறிவியல் முன்னேற்றத்தைத் துறந்துவிட்டு இயற்கை வாழ்விற்கு மீண்டு செல்லவேண்டும் என்கின்றனர்.

இந்தக் கற்பனாவாதிகள் விரும்புவது போல மனித சமூகமானது திரும்பவும் மரவுரி தரிக்கவும், சக்கிமுக்கிக் கல்லில் தீயுண்டாக்கவும் திரும்பிச் செல்லமாட்டார்கள். மனித அறிவியலையும் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியையும் தனிச் சொத்துடைமை அமைப்பிடமிருந்து பறித்தெடுத்து சோசலிசத்தின் மனித முயற்சிகளுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். ஆனால் ஜகோவா மக்களின் போராட்டங்களை நிராகரித்து அரசியல் வெறுப்பை மக்களிடம் விதைக்கின்றது.

மனிதர்கள் வாழும் சமூக, பொருளாதார அமைப்பை மாற்றுவதினூடாக மனித மனங்களில் மாற்றத்தை

படிப்படியாக ஏற்படுத்துவதை விடுத்து, மனித அகங்களை அன்பு கொண்டதாய் மனிதக் கருணையுடையதாய் மாற்றி விட முடியும் என்கின்றனர். இவர்களின் யதார்த்தத்திற்குப் புறம்பான புறஉலகை அலட்சியம் செய்யும் கற்பனைகள் பலவிதமான உளவியல் பாதிப்புகளை மனச்சிதைவு நோய்களைத் தோற்றுவிக்கின்றது.

இவர்கள் தம்மோடு இணைபவர்களை அரசியல் மற்றும் சமூகரீதியில் செயலிழக்கச் செய்வதுடன் சமய ரீதியில் அரைமயக்க நிலைக்கு இட்டுச் செல்கின்றனர். கண்முன்னே காணும் உலகிலிருந்து தப்பி ஜகோவாவின் தேவராச்சியத்தில் சரணடையும்படி வேண்டுகின்றனர்.

ஜகோவா புகலிடத்திலும் ஒரு பகுதித் தமிழர்களை தம் அமைப்புக்குள் இணைத்து உள்ளது. இந்த அமைப்பு, பெரும் செல்வந்தர்களிடம் இருந்து பெருந்தொகை நிதியூற்றுக்களைக் கொண்டு உள்ளது. மனிதர்களைச் செயலற்ற நிலைக்குத் தள்ளுவதன் மூலம் எதிர்ப் புரட்சிக்கு சேவை செய்கிறது. ஆனால் ஜகோவாவைவிட பிற்போக்கான இந்து மதத்திற்கு ஜகோவாவை எதிர்க்கும் எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது.

இலங்கை ஒரு முதலாளிய ஜனநாயகப் புரட்சியைக் கூட நடத்தி முடிக்கவில்லை. அதனால் மத உணர்வுகள், விவசாய சமூகப் பண்பாடுகள் இன்னமும் உயிரோடு உள்ளன. ஜனநாயகம் பரவியிருந்தால், பகுத்தறிவும் மனித சுதந்திரமும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டிருக்கும். பௌத்த மதத்தின் அரசியல் மேலான தலையீடு ஒழிக்கப்பட்டு தனிமனித மதிப்புகள் மனித உணர்வுகள் வளர்ந்திருக்கும். கதிர்காமத்திலும், மடு மாதா கோவிலிலும், வெசாக் பண்டிகைகளிலும் பல்லாயிரம் மக்கள் எவ்வாறு குவிகிறார்கள். சமய வழிபாடுகளுக்கு பெருந்தொகை நேரத்தை ஏன் தருகிறார்கள்? இதற்கான பதில் இலங்கை விவசாய சமூக வாழ்வின் பலம் என்பதாகும். ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் பலநூறு பேரை உள்ளடக்கக் கூடிய கிறிஸ்தவ தேவாலயங்கள், எட்டுப் பத்துப் பேருடன் மக்களிடமிருந்து அந்நியப்பட்டுக் கிடக்கின்றன.

ஜேர்மனியில் 70சதவீதத்திற்கு மேலான மக்கள் கடவுள் நம்பிக்கை அற்றவர்களாகவோ, கடவுள் பற்றிய எவ்வித அக்கறையும் அற்றவர்களாகவோ காணப்படு கின்றனர். ஆனால் இலங்கையில் எமது பழைமைவாதக் கிராமங்கள் ஆற்றடி, மரத்தடி, குளத்தடி என்று பல பத்துக் கடவுள் தரிசனங்களோடும், நாலாயிரம் ஐயாயிரம் ஆண்டுக்கால அம்மி, குளவி, ஆட்டுக்கல், உரல், உலக்கை, மரக் கலப்பைகளோடும் இன்றைய அணுசக்தி உலகில் காலம் தள்ளுகின்றனர்.

போர்க் காலங்கள் மனிதரின் வாழ் வாதாரங்களைப் பறித்துவிடுகின்றன. சொத்துக்களை இழப்பதும், உறவுகளைத் தொலைப்பதும், நோய், பட்டினி என்பனவற்றுடன் போராடுவதும் அவர்களது இயல்பு வாழ்வாகி அவர்களை எதிர்காலம் அற்றவர்களாக்கி வருகின்றது. இலங்கை அரசு-புலிகள் இரு பகுதியினதும் ஜனநாயகவிரோதப் பண்புகளும், சுதந்திரப் பறிப்பும் மாற்றுக் கருத்து மறுப்பும் மக்களை இறையுணர்வுகளில் ஆழமாய் இறக்குகின்றது. அவர்கள் சகலதையும் கடவுளிடம் முறையிட முயல்கின்றனர். மரணமும் நிச்சய மற்ற வாழ்வும் சமயம் கூறும் உலகும் நிலையற்றது. மானுடவாழ்வு பொய்யானது என்பன போன்ற கருத்தியல் களை உறுதிப்படுத்துவதாய் உணர்கின்றனர். அரசியல்மயப்படாத மக்களுக்கு இதுவே விதியாகின்றது.

UNP, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, JVP, போராளிக் குழுக்கள், தமிழ்க் கூட்டமைப்பு என்று சகல சக்திகளும் உலக மூலதனத்தின் முன்னால் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கிடக்கிறார்கள். இலங்கையின் சொத்துக்கள், இயற்கை வளங்கள், கூறுபோட்டு அந்நியருக்கு விற்கப்படு கின்றன. தொழிலின்மை, தொழிலாளர் வேலை நிறுத்தம் என்பன இலங்கை தழுவிய நிலையில் இடம்பெறுகின்றன. மக்கள் போராட்டங்களைக் குலைக்கத்தக்கதாக மதவாத உணர்வுகள் தூண்டப்படுகின்றன. JVP பௌத்த மதத்தை யும் மார்க்சியத்தையும் இணைத்த அரசியல் பற்றிப் பேசுகின்றது. மார்க்சியவாதிகள் தீவிரமான அரசியலுக்கு அழைக்கப்படும் காலம் மீண்டும் தொடங்கிவிட்டது.❑

---

## புஸ்பராஜாவின் சாட்சியம்

புஸ்பராஜாவின் ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் நூலின் அறிமுக விழா தமிழரசுக் கட்சி தலைவர் ஆவரங்கால் சின்னத்துரை தலைமையில் ஈஸ்ற்காமில் ஏப்ரல் 10ல் இடம்பெற்றது. வி சிவலிங்கம், இராஜநாயகம், எம் என் எம் அனஸ், நிக்களஸ் பிள்ளை, மங்கையற்கரசி அமிர்தலிங்கம், ந சபேசன் ஆகியோர் உரையாற்றினர்.

இரு மாதங்களுக்கு முன்னரேயே பாரிஸில் வெளியிடப்பட்ட இந்நூல், அறிமுகப்படுத்த அழைக்கப்பட்ட வர்கள் படிப்பதற்கு வழங்கப்படவில்லை. அதனால் புஸ்பராஜாவின் நூல் தமிழர்களின் போராட்டத்தின் ஒரு காலப் பகுதியையாவது உண்மையில் சொல்லி இருக்கும் என அவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

நூல் குறிப்பிட்ட காலத்தில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்களைப் பதிவு செய்திருந்தமை வரவேற்கப்பட்டது. ஆனால் சம்பவங்கள் பற்றிய நம்பகத் தன்மை பல தரப்பினராலும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டது.

'புஸ்பராஜாவால் சொல்லப்பட்ட பொய்களும் சொல்லப் படாத உண்மைகளும்' என்று தனியாக ஒரு நூல் எழுதப்பட வேண்டும் என்று புலோலி வங்கிக் கொள்ளை உடன் தொடர்புடைய ஒருவர் தெரிவித்தார். சம்பவங்க ளைத் திரிபுபடுத்தி தனிப்பட்ட முறையில் புஸ்பராஜா தன்னை முதன்மைப்படுத்த முயற்சித்து உள்ளார் என்றும் இந்நூல் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு உள்ளது.

ஆனால் தனது சாட்சியம் உண்மையானது என புஸ்பராஜா வாதிடுகிறார். மேலும் புத்தகத்தின் விலை £30 என்பது பலரையும் அதிர வைத்தது.❑

சிறுவர் தேசம்

THESAM

SIRUVAR 05

May 04 / June 04



மேற்கு இலண்டன் தமிழ் பள்ளி மாணவர்களின் கலாச்சார மாலை ஏப்ரல் 17ல் இலண்டன் லோகன் மண்டபத்தில் நடை பெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றிய இக்கலை விழாவில் பல நூறு பெற்றோர், உறவினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவில் நாவன்மைப் போட்டியில் வெற்றி பெற்றவர் களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது. (விபரம் கிழே)

## CHILD TO CHILD

தமிழ் மகளிர் மன்றம், பாரதி தமிழ் பள்ளியின் அனுசரணையுடன் இவ்விழாவை கவுன்சிலோவில் ஏப்பிரல் 24ல் ஒழுங்குபடுத்தி இருந்தது. சிறார்களை மையப்படுத்தி பல்சுவை விருந்தாகவும் குடும்ப ஒன்றுகூடலாகவும் இந்நிகழ்ச்சி அமைந்தது.

தமிழ்த் தாய் வாழ்த்து விழாவின் முதலாவது நிகழ்ச்சியாக அமைந்தது. 'மாதா பிதா குரு தெய்வம்' என்ற தலைப்பில் பேச்சு, பரதநாட்டியம், பச்சைப்பாற்கட்டி, எமது பெரியார் பேச்சு, அபிநய நடனம், வாத்திய விருந்து, Child to Child உரை, சிறுவர் உலகம் பற்றிய பேச்சு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சி பங்குபற்றிய சிறார்களுக்கு மநன்மை பயக்குவதாக அமைந்தது. ஆனால் பார்வையாளர்களாக வந்த சிறார்களிடம் அவ்வளவு ஈடுபாட்டைக் காணவில்லை. சிறார்களைக் கவரும் வகையில் வர்ண ஆடை அலங்காரங்களை அதிகப்படுத்தி நடனம், நாடகம் போன்றவற்றை தயாரிப்பது, புலம்பெயர்ந்த மண்ணில் சிறார்கள் அறிந்து வைத்திருக்கும் கதாபாத்திரங்களைச் சேர்த்துக் கொள்வது சிறார்களது கவனத்தை ஈர்க்கும்.

சிறார்களுக்காக விழாக்கள் நடத்தும் பழக்கத்தை ஏற்படுத்துவதில் தமிழ் மகளீர் மன்றத்தின் முயற்சி பாராட்டத்தக்கது. சிறுவர்களை மட்டும் பார்வையாளர்களாகக் கொண்ட நிகழ்ச்சிகளை இவர்கள் எதிர்காலத்தில் செய்ய வேண்டும். நிகழ்ச்சியின் முடிவாக பரிசளிப்பு இடம்பெற்றது. நிகழ்ச்சிகள் காலதாமதமாகியதால் விழா முடிவடைய முன்னரே மிகுந்த சுவை மிக்க உணவு பரிமாறப்பட்டது. சிறார்கள் பரிசுபெறும் போது கை தட்டி உட்சாகப்படுத்த யாரும் சபையில் இருக்காதது (நான் உட்பட) மிகுந்த குற்ற உணர்வை ஏற்படுத்தியது.

### போட்டி முடிவுகள்

ஒரு சிறுகதை (3-5 வயது)
கிசாயினி சிவக்குமார்

தாயின் பெருமை, பாரதிதாசன் (5-8 வயது)

| | |
|---|---|
| 1st | வினுஜா பிறேம்குமார் |
| 2nd | லாவன்யா லோகநாதன் |
| 3rd | மகேசா நந்தகுமார் |

எமது கடமை, தமிழின் பெருமை (8-11)

| | |
|---|---|
| 1st | தாமன்யா குகநாதன் |
| 2nd | ஜெயந்தி சுந்தரேசன் |
| 3rd | பிரகலை மாணிக்கவாசகர் |

காக்கைக் குருவிகளும் நாமும் குறள் காட்டும் வாழ்வு (11-14 வயது)

| | |
|---|---|
| 1st | நாயானி அன்பழகன் |
| 2nd | அபர்ஜிதா ரவீந்திரநாதன் |
| 3rd | மாதுமை நவநீதநாதன் |

புலம்பெயர் நாடுகளில் தமிழ் இனம் (14-18 வயது)

| | |
|---|---|
| 1st | குல்யெலியா பாலேந்திரன் |
| 2nd | சிறிலக்ஷ்மி ஸ்ரீகாந்தலிங்கம் |
| 3rd | சுதேசன் மகேந்திரன் |

# My story of World War 11

Year 1939

"London's burning! London's burning!" everyone was shouting. My dad was getting ready for the charge. Aircrafts were bombing the country. My mum and I were cuddling together in a dark corner. We heard the noise people die. Both of us ran upstairs to our bedroom to shut the heavy, rough, thick curtains for the black out. My mum told me to go to the evacuee room.

The next day I was sent with the other evacuees, on the underground train. The train was crowded with evacuees. Their parents were waving good bye to their children. On the way I saw that everything was black.

But then before I knew it, I was going to Yorkshire and saw a girl called Jarz. She was in brightly coloured clothes.
She said "Hop on the car" in a nice gentle voice.

She immediately took me to a huge house which looked like a palace! We went inside and met Lady Yvonne and Madam Vasse. They talked about my long journey, Lady Yvonne took me to the garden. The garden was long as a tower, as it was sunny the grass was shiny.

I saw a badge on the garden, I picked it up with my hands trembling. I asked Lady Yvonne who's was it?
She replied "This is an old soldier's badge"
The badge was a unicorn boxing a tiger.

The phone was ringing, Madam Vasse called me. I ran suspiciously inside and answered the phone. It was my mum!!!

I was speaking faster than ever, the only word she said was she was coming here on Saturday.

I read her letter it said:

*Dear Gowreesan*
*You have a happy news the War has started to end and your dad is coming!!!*

From your best
Mum.



GOWREESAN (AGE 9)

I was running all around the house yes! Yes! Yes!
Just a minute there was a door ring. Ding Dong! Ding Dong!
I went and it was my mother...

## அனுசியாவின் அரங்கேற்றம்

கலைமாமணி மஞ்சுளா நரசிம்ஹனின் மாணவியான அனுசியா வசந்தனின் (15) பரதநாட்டிய அரங்கேற்றம் ஏப்.24 ஜெனிவாவில் இடம்பெற்றது. ஐநா, இலங்கை, இந்திய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்கள் அரங்கேற்ற மலருக்கு வாழ்த்துச் செய்தியும் வழங்கி இருந்தனர். வாய்ப்பாட்டு குமாரி சரண்யா கிருஸ்ணன், மிருதங்கம் எம் தனம்ஜெயன், வயலின் விஜயராகவன், நட்டுவாங்கம் குமாரி என் சசிரேகா ஆகியோர் துணைக் கலைஞர்களாகப் பங்கேற்று நிகழ்வைச் சிறப்பித்தனர்.



## உங்களுடன் சில நிமிடங்கள்

தமிழ் சிறார்களின் நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்கள் பற்றிய செய்திகளை சிறுவர் தேசத்திற்கு படத்துடன் அனுப்பி வைக்கவும். உங்களிடம் உள்ள தகவல்களை மற்றைய சிறார்களுடனும் பகிர்ந்து கொள்ளுங்கள். இவற்றுக்கு பெற்றோரிடம் இருந்து பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

மேலும் நீங்களும் சந்தாதாரர் ஆனால் தேசம், சிறுவர் தேசம் சஞ்சிகையை தபால் மூலம் தவறாமல் பெறமுடியும். (சந்தாப் படிவம் 24ம் பக்கத்தில்) இன்னும் பல நல்ல விடயங்களுடன் மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

# The Good, The Bad, The Barking Mad: Young Voices from the East London

**A Film By Nelson and Friends**

with support from the London School of Hygiene & Tropical Medicine - LSHTM. Which also supported the application to the WHO Media Award.



On the top is Nelson Sivalingam (aged 15) from Eastbury School in Barking, East London. Nelson has been working with his friends in their spare time to make this film, as well as with other friends on the poorest housing estates of Barking. Together they call themselves HEAD - Higher Environmental Awareness Development. Nelson is the group's film director, cameraman, producer, and editor.

They undertook and filmed a small study of the culex mosquito problems in Barking, looked at international patterns of malaria, and designed websites. The group also presented at a London wide conference on their opinions of their part of the city and presented a seminar at the LSHTM.

Most recently, the group introduced members of the International Network on Child Health and the Environment to Barking -showing them the best and worst aspects of this part of London - a vision of London that very few international visitors have ever seen.

Now the group decide to make a film about their experience - what they think of their part of London, what they have done, what they want done by their council. They also want to show what other residents of Barking think and what their friends think and want from the poorest parts of Barking.

(The Fourth Ministerial Conference on Environment and Health meets in Budapest from 23 - 25 June 2004. Its theme is "The future for our children". WHO Regional Office for Europe will be giving a Media Award to mark the occasion. What is the environment doing to children? How does contaminated environment affect health? )

## நோர்வே மொழிக் கவிதைகள்

### «Gud sin jord» கடவுளின் பூமி

Gud har gitt jorda til oss, vi må passe den.
Gud har gitt oss eit fint liv – vi må leve for alle.
Gud gir mat til oss –
vi må gi til de som suiter.
Gud gir kunnskap til oss –
vi må dele med de andre.
Gud viser oss rett vei –
vi må følge den.



ராஜ்தேவன் (வயது 15)
Hareid, Norway

### HØST இலையுதிர் காலம்

Her kommer høsten
sola blir borte

Her kommer høsten
regn strømmer ned

Her kommer høsten
bladene faller

Her kommer høsten
livet skal sove


Her kommer høsten
jorda gir rikdom

Her kommer høsten
strevsom for alle

மதுரா

# MATHURA CAKES

*[The name behind the quality]*



- Birthdays
- Weddings
- Anniversaries
- or any other event

பிறந்தநாள் அல்லது திருமண வைபவம்
வடிவத்தில் மனம் நிரம்பிடும்

Made by experienced & Qualified Specialists

Call us on

**020 8672 9802, 07958 412 515,**


**email: ajathika@aol.com**

**9 London Road, London SW17**

**குறைந்த செலவில் நிறைந்த சேவையைப் பெற**

# MERVIN WINDOWS

**Manufacturers & Installers
of Fine Quality, High Security,
Double Glazed uPVC Windows & Doors**



6 Lea Park Trading Estate
Millicent Rd
Leyton, London E10 7LG

E-mail : lingam281@yahoo.co.uk
Tel : 020 8558 4467
Mob : 079 5011 8563



# இலண்டனில் வளர்ச்சிபெறும் பரதக்கலை

ரி. கொன்ஸ்டன்டைன்
சன்றைஸ் வானொலி



இலண்டனில் பரதக்கலை ஜனரஞ்சகமான முறையில் வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை பெரும்பான்மையோர் ஏற்றுக்கொள்வர். ஆயினும் இதற்கு ஒரு படிமேல் சென்று பரதக்கலை இலண்டனில் வளர்ச்சி பெற்றதன் காரணம் என்ன? பரதக்கலை சரியான முறையில் தான் வளர்ச்சி பெற்றுள்ளதா அல்லது பரதக் கலை இலண்டனில் கட்டாயம் தேவைதானா என்று ஆராய முற்பட்டால் பல கருத்துவேறுபாடுகள் தலைதூக்கவே செய்யும்.

இலண்டனில் பரதநாட்டியம் வளர்வதற்கு தமிழ்ப் பெற்றோர்கள் எமது கலை கலாச்சாரத்தின்பால் கொண்ட அதீத அக்கறைதான் முக்கிய காரணம் என்று பரவலாகத் தெரிவிக்கப்படும் கருத்தில் உண்மையில்லை. எனது அனுபவத்தின் வாயிலாகக் குறிப்பிடுவதானால், நான் கண்டதும், ஏதோவிதத்தில் தொடர்புபட்டதுமான நாட்டிய நிகழ்ச்சிகளில், குறிப்பாக அரங்கேற்ற நிகழ்ச்சிகளில் 95% பெற்றோர்கள் தமது சமூக அந்தஸ்தை நிலை நிறுத்தும் தளமாகவும், தமது உறவினர் நண்பர்களுக்குப் போட்டியாக நடாத்தப்படும் நிகழ்ச்சிகளாகவுமே அரங்கேற்றங்களை நடத்தி முடித்துள்ளனர்.

முதலில் பிள்ளைகள் தமிழ்ப் பாடசாலை ஒன்றிற்கு அனுமதி பெறுவார்கள். அதன் தொடர்ச்சியாக அங்கு இடம்பெறும் ஏதோவொரு பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வுக்குப் பார்வையாளராகச் செல்வார்கள். தொடரும் தமிழ்ப் பள்ளிச் சந்திப்புகளில் இந்நிகழ்வு பற்றிய விமர்சனங்கள் பெற்றோரிடையே வெவ்வேறு படி நிலைகளில் இடம்பெற்று, அதன் கவர்ச்சியில் தமது பிள்ளையின் அரங்கேற்றம் ஒரு காட்சிப் படிமமாக மாறி ஈற்றில் அப்பிள்ளையின் அரங்கேற்ற நிகழ்ச்சியில் வந்து அது முடிவுறுகின்றது. எனவே ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது, எமது கலை, கலாச்சாரத்தில் கொண்ட ஆழமான அக்கறையாக இந்த அரங்கேற்றம் அமைகிறது என்ற வாதத்தில் உண்மை இல்லை.

இலண்டனில் பரதக்கலை வளர்ச்சி பெற்றுள்ளதற்கு ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இரு காரணிகள் முக்கியமாக அமைகின்றன. 1985ம் ஆண்டளவில் இருந்து இலண்டனில் இடம்பெறும் பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் பரதநாட்டியத்திற்குக் களம் வழங்கப்பட்டு உள்ளது. ஆரம்பத்தில் விடுதலை இயக்கங்கள் நடத்திய கலைவிழா நிகழ்வுகளில் நாட்டியம் ஒரு அங்கமாக நிரலிடப்பட்டது. பின்னாளில் பொங்கல் விழா, பழைய மாணவர் சங்க ஆண்டு விழாக்கள் என்று பரவலாக மேடையேற்றம் கண்டு அவை ஜனரஞ்சகமாக்கப்பட்டன.

இலண்டனில் பரதக்கலை வளர்ச்சிக்கு இரண்டாவது காரணம் புலம்பெயர் சமூகவியல் பாற்பட்டது. சிறுபிள்ளைகளுக்கு குறிப்பாக 2வயது தொடக்கம் பெண் பிள்ளைகளிடம் வண்ண ஆடைகளிலும் ஆபரணங்களிலும் ஆர்வம் காணப்படுவது வழக்கமாகும். தமிழ்த் தொலைக் காட்சிகளின் வாயிலாக நாளாந்தம் வரவேற்பறைகளில் நுழையும் தமிழ்த் திரைப்படங்களும், மெகா சீரியல்களும் இந்த மாயையை மேலும் வலுவாக அவர்களின் மனதில் பதித்துவிடுகின்றன.

மறுபுறத்தில் இந்தச் சிறார்களின் பெற்றோர்கள், தத்தம் பிள்ளைகளை அடுத்தவர் மெச்ச வேண்டும் என்ற அங்கலாய்ப்பில் அவர்களின் ஆசைகளுக்கு வடிவம் கொடுக்க முனைகிறார்கள். இவ்வகையில் நடனக்கலை அவர்களது ஆசைக்கு உயிர்கொடுக்கும் ஊடகமாகின்றது. எனவே நடனக்கலையின்பால் அவர்களின் ஒட்டு மொத்தமான ஈரப்பு எவ்வித புறத்திணிப்புகளுக்கும் உட்படாமல் இளம் பிள்ளைகளை நாட்டியப் பயிற்சியை நாடிச் செல்ல வைக்கின்றன. தமிழ்ப் பாடசாலைகளும், நடன ஆசிரியைகளும் சுறுசுறுப்பாகவும் அக்கறையுடனும் செயற்பட நடனக்கலை இலண்டனில் பரவலான வளர்ச்சியை ஜனரஞ்சகமான முறையில் கண்டு நிற்கின்றது.

இந்தக் கலைக்குச் செய்ய வேண்டிய தமது தார்மீகக் கடமைகளை இலண்டனில் உள்ள இந்து ஆலயங்கள் செய்யத் தவறியமையால் இந்த இடைவெளியை நடன அசிரியர்கள் தத்தமது பாணியில் நிரப்ப எத்தனிக்கின்றனர். இலண்டனில் நடனக் கலை மேலும் சிறப்பாக வேரூன்றி ஆழமாக வளர வேண்டுமாயின் இக்கலையில் சம்பந்தப்பட்டவர்களும் பெற்றோரும் ஒருநாள் கூத்தாக முடியும் தனிப்பட்ட பணச்சடங்காக நடன அரங்கேற்றங்களை மாற்றாமல் அதன் வரலாற்றுப் பாரம்பரியத்திற்கு மதிப்பளித்து, இக்கலையை ஆழமாகக் கற்றுத் தேர்ச்சி பெறத்தக்க மாணவர்களை இனம்கண்டு அவர்களின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். வெறும் நடன அரங்கேற்றங்களுடன் இக்கலையை முடிவுக்குக் கொண்டுவராமல், புகலிடத்தில் பல்லின சமூகத்தவரும் உணர்ந்து மனங்கொள்ளத் தக்க வகையில் புதிய தளங்களை நோக்கிய ஒரு கலைவடிவமாக நகர்த்த முன்வரவேண்டும்.

இதற்கு பரதக்கலையை குறுகிய நோக்கம் கொண்டு வர்த்தக நோக்கிலும் தற்பெருமைக்காகவும் பயன்படுத்த முற்படாத, கலையைக் கலையாக மாத்திரம் நேசிக்கும் நடன ஆசிரியர்களும், மற்றும் கலைஞர்களும் முன்வர வேண்டும். வருவார்களா? ❑

ஈழத்தின் இலக்கிய சஞ்சிகையான மல்லிகையில் கம்பவாருதி ஜெயராஜ் எழுதிய 'வராதே! வரவல்லாய்...' என்ற புலம்பெயர்ந்தவர்கள் பற்றிய கட்டுரைக்கு 'அப்பால் தமிழ்' நெறியாளர் கி பி அரவிந்தன் எழுதிய பதில். 'வம்பவாரிசு ஜெயராஜ் ஆருக்கு வைக்கிறார் ஆப்பு' என்ற தலைப்பில் சென்ற இதழில் பிசுரமான கட்டுரையின் இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது.

# ஒரு குடம் பாலும் துளித் துளியாய் நஞ்சும்



## கம்பவாருதி அருளும் உபதேசம்

கி பி அரவிந்தன்
அப்பால் தமிழ் நெறியாளர்

இலங்கைத் தமிழரின் புலப்பெயர்வு கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் முற்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்த மலேசிய புலப்பெயர்வுதான் யாழ்ப்பாணத்தின் (கம்பவாரிதியின் மொழியில் செம்பாட்டு மண்ணில் பிறந்து..) கடல்தாண்டி வாழத் தலைப்பட்ட முதல் நிகழ்வாகும். அதற்கடுத்து இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின் யாழ்ப்பாண மேட்டுக்குடியினர் படிப்பிற்காகக் சென்று இலண்டன் கனவை உருவாக்கிய பயணம் ஆகும். பின் 1960களின் பிற்பகுதியில் எண்ணெய் வள நாடுகள் நோக்கிய செல்வம் தேடும் பயணமும் புலப்பெயர்வும் நிகழ்கின்றது.

மிகப்பெரிய அளவினதாக 1980களில் நிகழ்ந்த தற்போதைய புலப்பெயர்வு தொடங்கியது. இப்புலப் பெயர்வுக்குப் போரும் பொருளாதாரமும் முக்கிய காரணங்கள் என்பது மறுக்க முடியாதது. முன்னைய புலப் பெயர்வுகள் (மலேசியா, இங்கிலாந்து, மத்திய கிழக்கு) தனியே பொருளாதாரக் காரணியை கொண்டவை. பின்னையதான புலப்பெயர்வு தான் கம்பவாரிதி ஜெயராஜிக்கு உறுத்தலாக இருக்கின்றது. ஏனெனில் இந்தப் புலப் பெயர்வில் இடம்பெற்றவர்களில் பெரும்பான்மையினர் சாதாரணர்கள், சாமானியர்கள், பாமரர்கள் ஆம் சூத்திரர்கள். (பிளேன் ரீ க்கும் வழி அற்றவர்கள் உ-ம்: "பிளேன் ரீக்கும் வழியில்லாமல் காய்ந்து திரிந்த உங்கள் தோற்றத்தில் கோர்ட்டாலும், சூட்டாலும், ரையாலும் ராஜகளையே வந்துவிட்டது")

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதாரத்தை முன்னரே மணியோடர் பொருளாதாரமென கம்யூனிஸ்ட் கட்சியினர் (மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா உட்பட) அரசியல் நையாண்டி செய்வதுண்டு. இதற்குக் காரணம் கடல் கடந்தவர்களும், குடாநாட்டுக்கு வெளியே அரச உத்தியோகங்களுக்குச் சென்றவர்களும் அனுப்புகின்ற பணவரத்தால் தான் யாழ்பாணம் உயிர் வாழ்கின்றது என்பதையும், அதற்கு வேறெந்த அடிப்படை பொருளாதார வளமும் இல்லை என்பதையும் சுட்டிக் காட்டத்தான். இதில் உண்மையும் இருக்கக் கூடும்.

எனது பிரச்சனை அதுவல்ல. அறுபதுகளில் இலங்கை பத்திரிகைகளில் வெளிவந்த சுந்தரின் புகழ்பெற்ற கேலிச் சித்திரங்களான சவாரித் தம்பர், மைனர் மச்சான், மிஸ்டர் அன்ட் மிஸிஸ் டாமோடரன் போன்றதான தொடர்களை பார்த்திருந்தால் - படித்திருந்தால் கம்பவாரிதி கருதும் மொழி, பண்பாட்டு சீரழிவுகள் எப்போது தொடங்கியது யாரால் தொடங்கப்பட்டது என்பது தெரியவந்திருக்கும்.

கடந்த கால் நூற்றாண்டுக் காலத்துக்குள் புலம்பெயர்ந்தோரின் தமிழ் மொழிப் பரிச்சயம் பற்றிக் கவலை கொண்டவருக்கு கொழும்பு ரமிலர் பற்றியோ கறுவாக் காட்டு ரமிலர் பற்றியோ அறியாமல் போனதும் ஆச்சரியம் தான் (அதற்குள் அவர் சங்கமித்து விட்டது காரணமாக லாம்). 1977ம் ஆண்டு இனக்கலவரத்தில் அடிபட்டு கொழும்பில் இருந்து லங்காராணி கப்பலில் பார்மேனியன் நாய்களுடன் வந்திறங்கிய கொழும்பு வாழ் பெருங்குடி ரமிலர்களின் ரமில் கேட்டு ரமில் ராய் வடித்த கண்ணீர் கம்பவாரிதி கண்டதில்லைப் போலும்.

மலேசியப் புலப்பெயர்வினால் யாழ்பாணச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் சாட்சியத்தை காரைபெயர்ந்து கிடக்கும் நாற்சார் வீடுகளில் இன்றைக்கும் காணலாம். தெல்லிப்பளை, மல்லாகம், உடுவில், மானிப்பாய், வட்டுக் கோட்டை, உரும்பியராய் பகுதிகளில் அப்போது பணப் பவிசுடன் கட்டிய உருக்குலைந்து கிடக்கும் வீடுகள் அந்தக் கதையைச் சொல்லும். இலண்டன் சீமைக்குச் சென்றவர்கள் இலண்டன் மாப்பிள்ளை தேடி விரதமிருந்த குமர்களை கைப்பிடித்து செல்வதற்கு வந்துசென்ற வேளைகளில் அவர்கள் காட்டிய பவிசுகள் கொஞ்சமா? அவர்கள் வீட்டுக் கொண்டாட்டங்கள், அவர்கள் அணிந்து காட்டிய கையில்லாத பிளவுசுகள், தொப்புள் காட்ட

கட்டிய சேலைகள், அலங்காரங்கள் கொஞ்சமா? அன்றைக்கு அந்தச் சாதாரணர்கள் வாய்பிளந்து, இந்த பணக்கொழுப்புகளின் ஆட்டங்களைக் கண்டு முகஞ் சுழித்து நின்றதெல்லாம் அவர் அறிந்ததில்லைப் போலும்.

அவ்வேளையில் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து கம்பராமாயண கலாச்சாரத்தை அல்லது கந்த புராணக் கலாச்சாரத்தைக் கற்றுக் கொண்டிருந்திருப்பார். (1981ம் ஆண்டில் ஜெயராஜ் மதுரையில் ஒரு அரசியல் வாதியின் காலில் விழுந்த அசிங்கம் பற்றி அப்போதைய தினபதி ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகத்தின் கட்டுரையை படித்தவர்கள் ஞாபகம் வைத்திருக்கலாம்).

"எற்புத்துளைதொறும் லண்டன் குளிரில் பரம சிவனுக்கு பச்சைத் தண்ணீரில் அபிஷேகம் நடக்கிறது" என்ற கவலையையும், "வெறும்மேலை, பனிக்குளிரும், பச்சைத் தண்ணீர்க் குளிரும் சேர்ந்து தாக்க நடுநடுங்கிக் கொண்டிருக்கிறார் பரமன்" என்ற பச்சாதாபத்தையும் வெளியிட்டு குணம் குறியற்ற பரமனுக்கு குணம் வழங்கிய பாங்கில் சும்மா சொல்லக்கூடாது வள்ளலாரை ஓரங்கட்டி விட்டார் கம்பவாரிதி அடிகளார். பேகன் குளிரில் நடுங்கிய மயிலுக்குத் தன்போர்வையை வழங்கி இலக்கியத்தில் இடம் பெற்றான். கம்பவாரிதி குளிரில் நடுங்கிய பரமனைக் கல்லில் கண்டதும் தனது குளிராடையை வழங்கி இருந்தால் இன்று தமிழ்கூறு நல்லுலகமும் பக்தகோடி உலகமும் கையேத்தித் தொழுதிருக்கும். தவறவிட்டு விட்டார். (கம்பவாரிதியும் குளிரை அறிந்திருப்பார்)

மேலும் இந்த புலம்பெயார்ந்த அற்பர்கள் அல்லது சூத்திரர்கள் "வேதம் வழங்காத நாடுகளுக்கு வரமாட்டேன் என்றிருந்த அவரையும் கட்டாயம் அங்கு கொண்டுபோய் படுத்தும் பாடு.. பாவம் சிவனார்! அவரைப் பார்க்க அழுகையாய் வந்தது" என்று அங்கலாய்த்து உள்ளார். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் எந்தக் கம்பவாரிதியின் அனுமதிபெற்று இந்தோசீனா, தாய்லாந்து, வியட்னாம், தென்னாபிரிக்கா, மொரிசியஸ், மார்ட்னிக், ரியூனியோன், குதலோப் போன்ற நாடுகளுக்கு பரமன் சென்றாரோ தெரியவில்லை. அதெல்லாம் வேதம் வழங்கும் நாடுகள். 1980களுக்கு பின் புலம்பெயர்ந்த நாடுகள்தான் வேதம் வழங்கா நாடுகளா? கம்பவாரிதிக்குத்தான் வெளிச்சம்.

வம்பவாரிசின் அறிவுக் கொழுந்து எப்படியெல்லாம் ஒளிர்கின்றது பாருங்கள். ஒரு சமூகம் புலம்பெயர்ந்தால் அது பூமிப்பந்தின் எந்த முனையாக இருந்தாலும் கூடவே கடவுள், கல்லு, கத்தரிக்காய் எல்லாம்தான் புலம்பெயரும். இது மானிட இயல்பு. இலண்டனுக்கு ஆனைமுகத்தோனும், வள்ளிமணாளனும் புலம்பெயர்ந்ததும் கோயில் கொண்டெழுந்ததும் 1960களில் என இலண்டன் தலப் புராணங்கள் கூறுகின்றன. புலம்பெயர்ந்த பக்த கோடிகளே உங்கள் கவனத்திற்கு: "தங்கள் குளிர்தீர கோர்ட்டோடும் சூட்டோடும் நின்று கொண்டு பக்கதர்கள் அபிஷேகம் செய்விக்கிறார்கள்" என்கிறார் ஜெயராஜ். இதனை நீங்களே கவனித்துக் கொள்ளுங்கள். அவருக்கான அபிஷேகத்தை வழங்குங்கள்.

கம்பவாரிசு சொல்ல விரும்பிய, பாலெனக் காட்ட முயற்சித்த செறிவு மிக்க நஞ்சுத்துளி எதுவென்றால் "வரமுடிந்தாலும் இனி இங்கு வராதீர்கள்" என்பதுதான். "வாரதே! வரவல்லாய்," என்று சொற் தொடருக்கு அவர் நஞ்சு தடவியுள்ளார். இங்கேதான் அவருடைய கபடம், கள்ளத் தனம், போலி ஆன்மீகம் எல்லாம் வெளிப்படுகின்றன. ஏனெனில் இவரது உபதேசம் அரசியல் சார்ந்தது.

1980களில் இலங்கைத் தீவைவிட்டு தமிழர்கள் பெருமளவில் வெளியேறத் தலைப்பட்டபோது இலங்கையின் குடியகல்வுத் திணைக்களம் இறுக்கங்களை தளர்த்தியிருந்தது. கண்டும் காணாமல் விட்டது. இது சிறிலங்கா பேரினவாத அரசின் தந்திர மிக்க அழிப்புத் திட்டத்தைச் சார்ந்தது. குள்ள நரி ஜேஆரின் அரசியல் திட்டமது. தமிழர்களின் வெளியேற்றம் தமிழ்த் தேசியத்தை சிதைக்கும் என அவர் நம்பினார்.

ஆனால் விளைவு தமிழ்தேசியத்தை வீறுகொள்ளச் செய்தது பலமுறைச் செய்தது. இது சிறிலங்கா பேரினவாதம் எதிர்பாராதது. இப்போது அவர்கள் நேரடியாகத் திரும்பி வருவது சிறிலங்கா பேரினவாதிகளுக்கும் பிடிக்கவில்லை. தென்கிழக்காசியாவின் சூத்திரதாரியாக மாறவிரும்பும் இந்தியாவுக்கும் பிடிக்கவில்லை. ஈழத் தமிழர்களை அழிக்கும் நோக்குடன் சந்திரிகாவுக்கும் - வீரவன்சவுக்கும் கூட்டினை ஏற்படுத்திய சூத்திரதாரி யார் என்பதை அரசியல் அரிச்சுவடி அறியாதவர்கூட கூறுவர்.

புலம்பெயாந்த ஒருவரால் அண்ணளவாக தாயகத்தில் வாழ்ந்து கொண்டிருந்த பத்துப்பேரை தன் தோள்களில் சுமக்க முடிந்தது. இது தாயகத்தின் போர் நெருக்கடியைப் பொருளாதார நெருக்கடியைத் தாங்கித்தரிக்க, முகங் கொள்ளச் செய்தது. தமிழ்ப் பரப்பிற்கு சர்வதேச முகவரியைப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது.

இவையெல்லாம் தென்கிழக்காசியாவின் சூத்திரதாரிகளுக்கும் சிறிலங்கா பேரினவாதிகளுக்கும் மட்டுந்தான் சங்கடத்தையும் சிக்கலையும் தோற்றுவிப்பது. இங்கேதான் கம்பவாரிதியின் அரசியல் அம்பலமாகின்றது. சூத்திரதாரியினதும், பேரினவாதியினதும் அரசியல் ஆதங்கத்தையே கம்பவாரிதியும் வெளிப்படுத்தியுள்ளார். அயோத்தியில் இராமர்கோயில் கட்டவும், இந்துத்துவத்தை உயர்த்திப் பிடிக்கவும், அகண்ட பாரதத்தை அமைக்கவும் கூடியதான காவிமயமான அரசிற்கு சேவை செய்வது வம்பவாரிதி போன்றோரின் விருப்பதிற்குரியதாய் இருக்கலாம். அது அவருடைய தனிப்பட்ட பிரச்சனை.

கம்பவாரிதி எள்ளி நகையாடும் புலம்பெயர்ந்தோரின் சிறுமைத்தனங்கள் தமிழ்ச் சமூகத்திற்கு மட்டும் உரியவையல்ல. இவை உலகளாவியவை, சமூக உளவியல் சார்ந்தவை. இப்பிரச்சனைகளை நேசத்துடன் தான் அணுகமுடியும், ஆலோசனை கூறமுடியும். அதைவிட தாயகத்தாருக்கும் புலம்பெயர்ந்தோருக்கும் இடையேயான

முறுகல்கள், மனக் குமுறல்கள் தாய் பிள்ளைகளுக்கு இடையே யான கோபதாபங்கள் போன்றதே. அரசியல் மொழியில் கூறுவதானால் இவை அகமுரண்பாடே தவிர பகை முரண்பாடல்ல. (கம்பவாரிதிக்கு இது பற்றிய விளக்கம் குறைவாக இருக்கும். மேலதிக விளக்கத்திற்கு மல்லிகை ஜீவாவை அணுகலாம்)

புலம்பெயர்ந்தவர்கள், அகதி கள், வேறு நாடுகளில் குடியேறி யோர் தாயகம் திரும்புதல் அவர்க ளது ஆதார உரிமை சார்ந்தது. மனித உரிமை சார்ந்தது. இதனை மறுத்து கருத்துக்கூற ஆலோசனை வழங்க கம்பவாரிதி முயற்சித்து இருப்பது நச்சுத்தனமானது. உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்த பாவத்திற்கு இணையானது.

இந்தப் பாவத்தில் இருந்து அவர் மீள என்னால் வழங்கக் கூடிய ஆலோசனை இதுதான். தமிழில் முறைசார் கல்வியையோ முறைசாராக் கல்வியையோ மேற்கொள்ள முடியாமல் ஆயிரக் கணக்கான குழந்தைகள் இலங்கை யின் வடக்கு கிழக்கில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்க ளுக்கு தமிழையாயினும் (உங்களி டம் தமிழ் அறிவு இருக்குமாயின் ஏனெனில் தமிழ் மொழி என்பது கம்பராமாயணத்திற்கும் அப்பாற் பட்டது) கற்றுக் கொடுக்க முயற்சி செய்யுங்கள்.

அதனை விடப் போர்ச் சூழலால் மனப் பிறழ்வுக்கும் பாதிப்புக்கும் உள்ளாகி இருப்போருக்கு ஆன்மீக வழியில் நம்பிக்கை அளிக்க முடியுமா என யோசியுங்கள் அதையும்விட ஆகக்குறைந்தது முகாம்களில் தங்கியுள்ள பெற் றோரை இழந்த குழந்தைகளுக்கு ஒரு நேர உணவாவது வழங்க முடியுமாயின் வழங்குங்கள். உங்களுக்குப் போகுமிடத்தில் புண்ணிமாவது மிஞ்சும்.

"வேறுள குழுவையெல்லாம்
மானுடம் வென்றதம்மா"
கம்பன்❑



## பனை - யாழ் மேலாதிக்கத்தின் அடையாளம்

ஜுட் - சமூகவியல் ஆய்வாளர்



தேசங்கள் தமது அடையாளத்தை வெளிக்காட்ட தேசியக் கொடிகளையும், தேசியங்கள் தமது அடையா ளத்தை வெளிக்காட்ட கலாச்சாரத்தையும் மொழியையும், மதங்கள் வெவ்வேறு அடையாளங்களையும் பயன்படுத் துகின்றன. தேசங்கள் சில இயற்கை வளங்களையும் தமது அடையாளச் சின்னமாக பயன்படுத்துகின்றன. குறிப்பாக பறவைகள், விலங்குகள் இன்னும் பல.

ஸ்ரீலங்கா தேசமும் தனது தேசிய அடையாளமாக தேசியக் கொடியையும் அதன் நடுவே வாளேந்திய சிங்கத்தையும் கொண்டிருக்கின்றது. இதுபோல் சில மாவட்டங்களும் தமது அடையாளத்தை வெளிப்படுத்த சில அடையாளச் சின்னங்களைப் பயன்படுத்தின. தேயிலைச் செடி மலையகத்தையும், அரசமரம் அநுராதபுரத்தையும் அடையாளப்படுத்தின. அதுபோல் பனை மரம் யாழ் மாவட்டத்தை அடையாளப்படுத்தியது. தேயிலைச் செடி மலையக மக்களின் அடிமைத்தனத்தையும் அரச மரம் பௌத்த சிங்கள ஆழுமையையும் அந்தத் தீவில் வெளிப்படுத்தியது. பனை மரம் யாழ் மேலாதிக்கத்தையும் அதனுடைய ஆழுமையையும் வெளிப்படுத்தியது.

பனை மரம் யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலும் மதுவுக்கும் (கள்) வேறு சில தேவைகளுக்கும் பயன்படுகின்றது. ஆனால் யாழ் மாவட்டத்தில் சுரண்டல், சாதிய அடிமைத்தனம், பிரதேச மேலாதிக்கம் ஆகியவற்றின் அடையாளமாக பனை மரம் உள்ளது. எந்த மாவட்டத்தினது ஆழுமையை மற்றைய மாவட்டத்து மக்கள் எதிர்த்தார்களோ அல்லது வெறுத்தார்களோ அதே மாவட்டத்தினுடைய அடையாளச் சின்னமான பனை மரத்தை முழுத் தேசத்தினுடைய அடையாளச் சின்னமாக மாற்றுவது அல்லது மாற்ற முனைவது யாழ் மேலாதிக்கத்தை முழுத் தேசத்தினுள்ளும் பதிக்க பலாத்காரம் பண்ணுவதாகவே அமையும்.

கடந்த 30 ஆண்டுகால தமிழ்த் தேசியப் போராட்டம் அத்தனை தமிழ் மாவட்டங்களினதும் தியாகப் பங்களிப்பைப் பெற்று இன்று ஓர் தேசத்தை உருவாக்குகின்ற நிலையில் உள்ளது. இந்நிலையில் வடக்கு கிழக்கு இணைந்த தேசிய அடையாளங்கள் அத்தனையிலும் பனை மரம் பதிக்கப் படுவது அல்லது யாழ் இசைக் கருவியைத் திணிப்பது என்பது முழுத் தேசமும் யாழ் மாவட்டத்தினுள் முடக்கப்பட்டு விட்டதோ இல்லை யாழ் மாவட்டத்தினுடைய எல்லைகள் முழுத்தேசத்தின் எல்லை வரை நீட்டப்பட்டு விட்டதோ என்ற சந்தேகத்தையும் வினாவையும் மற்றைய மாவட்டத்து மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

தமிழ் தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகளில் பின்புறக் காட்சிகளில் பனை மரம் பதிப்பதும் தமிழ் வானொலியின் ஆய்வாளர்கள் பகீரதப் பிரயத்தனம் பண்ணி யாழ் மாவட்டத்தை நியாயப்படுத்த முனைவதும் ஆய்வின் போது துரோகிகளை மற்றைய மாவட்டங்களில் தேடுவதும் தியாகிகளை யாழ் மாவட்டத்தினுள்ளே உருவாக்க முனைவதும் வரலாற்றை வடிகட்டி யாழ் மேலாதிக்கத்தை நியாயப்படுத்த முயல்வதன் மூலம் எதைக் காட்ட, எதை வெளிப்படுத்த, எதைச் சொல்ல வருகிறார்கள்? எந்த விதத்திலும் சம்பந்தமில்லாதவற்றுடன் பனை மரத்தையும் யாழ் வாத்தியக் கருவியையும் வரிந்து கட்டி வரலாறு படைக்க முனைகிறார்கள் யாழ் மேலாதிக்கவாதிகள்.❑

இலங்கையின் புரட்சிகர அரசியல் முன்னோடியான தோழர் ந சண்முகதாசன் எழுதிய 'கார்ல் மார்க்ஸின் வாழ்வும் போதனைகளும்' என்ற நூலில் 'மார்க்ஸின் வாழ்க்கை' என்ற கட்டுரையில் இருந்து மார்க்ஸின் வரலாறு தொகுக்கப்பட்டு உள்ளது.

# கார்ல் மார்க்ஸ்

## உலகின் அதிஉயர்ந்த சிந்தனையாளர்

விஞ்ஞான சோஸலிசத்தின் நிறுவகரும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் ஆசானுமான கார்ல் மார்க்ஸ் இறந்து ஒரு நூற்றாண்டு ஆகின்றது. மார்க்ஸின் ஆயுட்கால நண்பரும் தோழருமான ஃபிறெட்றிக் ஏங்கெல்ஸ் அவர்கள் மார்க்ஸ் மண்ணுள் அடக்கம் செய்யப்பட்ட தருணம் தான் ஆற்றிய இரங்கலுரையில் பின்வரும் உயர்ந்த பாராட்டுரையை வழங்கினார். "வாழும் சிந்தனையாளர்களுள் அதியுயர்ந்தவர் மார்ச் மாதம் 14 ஆம் திகதி மாலை இரண்டே முக்கால் மணிக்கு சிந்திப்பதை நிறுத்திவிட்டார்."

இவ்வுலகிற் பிறந்த ஆய்வறிவாளர்களில் அதி உயர்ந்தோரில் ஒருவர் கார்ல் மார்க்ஸ் என்பது பற்றியோ உலகின் மக்கள் தொகையின் பெரும் பகுதியின் தலை விதியை உன்னதமான முறையில் அவரது சிந்தனை பாதித்துள்ளது என்பது பற்றியோ ஐயத்திற்கிடமில்லை.

புருசியாவில் ட்ரையர் நகரில் 1818 மே 5ஆம் திகதி மார்க்ஸ் பிறந்தார். அவர் கிறிஸ்தவராக மதம் மாறிய ஒரு யூதரான ஹென்றி மார்க்ஸ் என்னும் செல்வச் செழிப்புடைய வழக்கறிஞரின் மூன்றாவது மகனாவார். பாடசாலையில் மிகத் திறமையான மாணவராயிருந்த அவர், பின்னர் பொன், பேர்லின் பல்கலைக்கழகங்களில் சட்டம் வரலாறு மெய்யியல் ஆகிய துறைகளில் பயின்றார். யேனா பல்கலைக்கழகத்தில் அவர் கலாநிதி பட்டம் பெற்றார். அவருக்கு 23 வயதாயிருந்த போதே அவரது அறிவாற்றல் அவரது நண்பர்களையும் அவரை அறிந்தவர்களையும் வியக்க வைத்தது.

1841இல் மோஸஸ் ஹெஸ் எழுதிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு எழுதினார் "இன்று வாழும் அதியுயர்ந்த அனேகமாக ஒரே உண்மையான மெய்யியலாளரைச் சந்திப்பீர்களென எதிர்பார்த்திருக்கலாம்......... அவர் அனைத்து ஜேர்மனியினதும் பார்வையைத் தன்பால் ஈர்ப்பார். வெகு ஆழமான மெய்யியல் ஆர்வமும் மிகவும் கூரிய சொல்நயமும் அவரிடம் இணைந்துள்ளன. ரூஸோ, வோல்டயர், ஹொல்வர், லெஸ்ஸிங், ஹைனெ, ஹெகல் ஆகிய அனைவரும் ஒருவரில் ஒன்றுபட்டிருப்பதைக் கற்பனை செய்யுங்கள். ஒன்றாகக் குவிக்கப்பட்டல்ல, ஒன்றுபட்டு என்கிறேன். அதுவே கலாநிதி மார்க்ஸ்".

1841இல் பட்டம் பெற்ற மார்க்ஸ் சிலகாலம் பத்திரிகைத்துறையில் இருந்தார். றைனி ஸைற்றுங் எனும் செய்தி ஏட்டின் ஆசிரியராக அவர் இருந்தார். அதற்குள் வெஸ்ற்ஃபாலென் பிரபுவின் அசாதாரண அழகுடைய 21 வயதுடைய மகளான ஜெனியுடன் 17 வயதான மார்க்ஸுக்கு காதல் ஏற்பட்டது. ஆர்கைல் கோமகன் குடும்பத்தின் பெண்வழித் தோன்றியவரான ஜெனி ஒரு ஆளும் பிரபுத்துவக் குடும்பத்தவராவார். அவரது சகோதரர் ஒருவர் பின்னாளில் புருசியாவின் மன்னரின் அமைச்சர்களுள் ஒருவரானார். தங்களது பெற்றோரது எதிர்ப்பின் காரணமாக, எட்டு நீண்ட ஆண்டுகளாகத் தமது நிச்சயதார்த்தத்தை இரகசியமாகவே இவர்கள் வைத்திருந்தனர்.

1843 ஜுன் 19ஆம் திகதி ஜெனிக்கு 29வயதாக இருக்கும் போது அவர்களுக்கு திருமணமானது. ஆயுட்காலத் துணைவி என்ற சொல்லின் மெய்யானதும் முழுமையானதுமான பொருளில் ஜெனி, மார்க்ஸின் ஆயுட்காலத் துணைவியானார். கொடும் இன்னல்கள், நசுக்கும் வறுமை, நிரந்தரப் பாதுகாப்பின்மை, நோய், குடும்பத்திற் சாவுகள் என்பனவற்றை மட்டுமன்றிச் சிறை வாசத்தையும் தாங்கிக் கொண்டார். எனினும் என்றுமே நிலை தடுமாறாது, பின்நோக்கிப் பாராது மார்க்ஸுக்கு அருகாகவே தன் வாழ்நாள் முழுவதும் உறுதியுடன் ஜெனி நின்றார். இறுதிவரை அவர்களது காதல் மங்காமற் சுடர்விட்டது.

பிரான்ஸ், பெல்ஜியம், ஜேர்மனி ஆகிய நாடுகளிடையே ஒவ்வொன்றினதும் புரட்சிகர இயக்கங்களில் பங்குபற்றி ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு நாடு கடத்தப்பட்ட மார்க்ஸ் 1843க்கும் 1849க்குமிடையே புலம்பெயர்ந்து வாழ்ந்தார். ஈற்றில், 1849 ஒகஸ்ட் 24இல் (பிரான்ஸிலுள்ள) பிறிற்றனியில் சதுப்பானதும் உடல் நலத்துக்கு ஒவ்வாததுமான இடமொன்றுக்கு நாடு கடத்துமாறான பிரெஞ்சு அரசாங்க ஆணைக்குப் பணிய

மறுத்து லண்டனுக்குச் சென்று குடியேறி ஏறத்தாழ 35 ஆண்டுகளாக தனது சீவியகாலத்தின் மிகுதியை அங்கேயே வாழ்ந்தார்.


அப்போதைய இங்கிலாந்து ஐரோப்பாவில் இருந்து வெளியேறிய அரசியல் அகதிகட்குரிய புகலிடமாக இருந்தது. அதிலும் முக்கியமாக அக்கால அளவிலேயே, அற்புதமான வாசிப்பு மண்டபமும் எண்ணிமாளாத புத்தகங்களும் கொண்ட பிரித்தானிய மியுசியத்தின் நிர்மாணமும் நிறைவு பெற்றிருந்தது. மார்க்ஸ் நாள் தவறாது அங்கு சென்று ஒவ்வொரு வேலை நாளிலும் பன்னிரண்டு மணிநேரத்தை அங்கு செலவிட்டு வந்தார். அங்கேதான் "மூலதனம்" தோற்றம் பெற்றது.

மார்க்ஸ், எங்கெல்ஸை 1844 ஓகஸ்ட் 28க்கும் செப்டெம்பர் 6க்கும் இடையே பாரிசில் சந்தித்தார். தனித்தனியே சுடரும் அறிவாற்றலும் மேதமையும் கொண்டவர்களாயிருந்தும் இருவரும் ஒருவரே போல் பேசுமளவுக்குப் பல்வேறு விடயங்களில் கருத்து ஒருமித்த இருவரிடையே எக்காலத்தும் காணற்கரிய அற்புதமான ஒரு நட்பு அங்கே தொடங்கியது.

அவர்களது நட்பைப் பற்றி லெனின் கூறியதாவது "முன்னோரிடையே காணப்பட்ட மனித நட்பைப் பற்றிய எந்த நெஞ்சை உருக்கும் கதையையும் மீறும் உறவு கொண்ட அறிஞர்களும் போராளிகளுமான இருவராலேயே தனது அறிவியல் உருவாக்கப்பட்டது என ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம் சொல்லக்கூடும்." எங்கெல்ஸ் எப்போதுமே தன்னலமற்றவராகத் தனக்கு இரண்டாமிடத்தை மட்டுமே ஒதுக்கிக்கொண்டவராயும் இருந்தார். "மார்க்ஸ் வாழ்ந்த காலத்தில் நான் ஒத்து ஊதுகிறவனாக இருந்தேன். இதில் சிறப்புப் பெற்றுள்ளேன். மார்க்ஸ் போல ஒரு நல்ல பிரதம வித்துவான் எனக்கு அமைந்தற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்" என்று ஏங்கெல்ஸ் கூறியிருக்கின்றார்.

நாடு கடந்து லண்டனில் வாழ்ந்த காலத்தில் மார்க்ஸ் தீவிரமான வறுமைக்கு உள்ளானார். தன் ஆடைகள் எல்லாம் அடமானத்தில் இருந்ததால், அவர் வீட்டை விட்டே வெளிக்கிட இயலாத ஒரு காலம் இருந்தது. ஒரு முறை தனது வீட்டைவிட்டு விரட்டப்பட்டார். 1852 செப்டெம்பர் 8ஆம் திகதி அவர் ஏங்கெல்சுக்கு எழுதியது "என் மனைவிக்குச் சுகமில்லை. (மகள்) ஜெனி, (வீட்டைப் பராமரிக்கும்) ஹெலனுக்கும் ஏதோ விதமான நரம்புக் காய்ச்சல். என்னால் இது வரையும், இப்போதும் மருத்துவரை அழைக்க இயலவில்லை. என்னிடம் மருந்துக்குப் பணமில்லை. சென்ற வாரம் முழுவதும் என் குடும்பத்துக்குப் பாணும் உருளைக் கிழங்குமே உண்ணக் கொடுத்தேன். இன்றைக்கு இன்னும் கொஞ்சம் பெறுவதற்கு இயலுமாயிருக்குமோ என்று யோசனையாயுள்ளது."

எவ்வாறாயினும் அவர் ஆற்றாமைக்கு இடம் அளிக்கவில்லை. தனது ஒரே மகன் இறந்த பின்னர்




1855 எப்ரல் 12இல் மார்க்ஸ் ஏங்கெல்ஸுக்கு எழுதியது "இந் நாட்களில் நான் அனுபவித்த பொல்லாத் துன்பங்களிடையேயும் உன்னுடைய நட்பின் நினைவும் இவ்வுலகில் நாம் இன்னும் செய்ய வேண்டிய அறிவார்ந்த பணி ஒன்று உள்ளது என்ற திடநம்பிக்கையுமே என்னை நிமிர்த்தி வைத்துள்ளன." மார்க்ஸ் மூலதனம் நூலை ஆக்கிக் கொண்டிருந்த காலத்தில் நச்சுப் பருக்கள் கடும் வேதனை தந்தன. ஏங்கெல்ஸிடம் வேடிக்கையாக "தமது மிகுதி வாழ் நாட்களெல்லாம் முதலாளி வர்க்கத்தினர் எனது நச்சுப் பருக்களை நினைவில் வைத்திருப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்." என்று மார்க்ஸ் கூறினார். ஒரு முறை, நண்பரொருவரிடம், தன்னிடம் பணமே இல்லாத எந்த நூலாசிரியரும் பணத்தைப் பற்றிய விளக்கக் கொள்கையைக் கற்குமாறு இதுவரை நேர்ந்திருக்குமோ தெரியாது என்று மார்க்ஸ் சொல்லியுள்ளார்.

முற்போக்கான பத்திரிகையான நியுயோர்க் டெய்லி ரிபியுனுக்கு கொஞ்சக் காலமாக ஒழுங்காக எழுதி வந்த போதும் மார்க்ஸுக்கு உறுதியாக வருமானமென்று எதுவும் இருக்கவில்லை. அவர் அவ்வேட்டின் ஐரோப்பிய அரசியல் நிருபராக இருந்தார். ஒவ்வொரு கட்டுரைக்கும் ஒரு பவுண் பணம் வழங்கப்பட்டது. ஆயினும் அவர் எழுதிய கட்டுரைகள் முழுவதும் பிரசுரமாகவில்லை. 1862வரை றிபியுனுக்கு எழுதி வந்தார்.

மார்க்ஸின் தந்தையும் தாயும் இறந்த சந்தர்ப்பங்களில் அவருக்கு மரபுரிமையாகச் சிறிது பணம் கிடைத்தது. 1845இல் மார்க்ஸால் தோற்றுவிக்கப்பட்ட முதலாவது கம்யூனிஸ்ட் கழகத்தின் 14 உறுப்பினர்களில் ஒருவரான நண்பர் வில்ஹெல்ம் வொல்ஃப் இடமிருந்து 600 பவுண் பெறுமதியான விருப்புரிமைக் கொடையை மரபுரிமையாகப் பெற்றார். இது உதவியாயிருந்தது. போதவில்லை.

ஏங்கெல்ஸின் தாராளமானதும் தியாக உணர்வு உடையதுமான நிதி உதவி இல்லாமல் இருந்திருந்தால், மார்க்ஸால் தான் எதிர்கொண்ட மாபெரும் இன்னல்களைத் தாண்டவோ "மூலதனம்" என்னும் சிறப்புமிக்க காவியத்தை எழுதி முடித்திருக்கவோ இயலாது போயிருக்கும்.





இலங்கையில் மே தின ஊர்வலம் ஒன்றின் போது மார்கஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரது உருவப்படங்கள் தாங்கிச் செல்லப்படுகிறது.

நிச்சயமாக அவர் பசியால் மரித்திருப்பார். ஏங்கெல்ஸ் தன் தந்தையின் மன்செஸ்டர் நெசவாலையில் தன் மனதிற்கு இசையாத வேலையில் ஒட்டிக்கொண்டிருந்ததும் மார்க்ஸுக்கு உதவியாக இருப்பதற்காகவே. 1869இல், தன் தந்தையின் சாவிற்குப் பின்னர் ஏங்கெல்ஸ் ஒரு செல்வந்தரான போது மார்க்ஸுக்கு 350 பவுண் ஓய்வூதியத்திற்கு ஏற்பாடு செய்தார். இதனால் மார்க்ஸின் வாழ்வின் பின்னைப் பகுதி சிறிது இலகுவாகக் கழிந்தது.

மார்க்ஸின் வாழ்வில் முக்கியமானதொரு பங்குவகித்த இன்னொருவர் லென்சென் எனப் பிரியமாக அழைக்கப் பட்ட ஹெலன் டெமூத் ஆவார். ஜெனி மார்க்ஸுக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும் போது அவருக்குப் பணியாற்ற வந்த லென்சென் அதன் பின் அவரை எல்லா இடத்தும் தொடர்ந்து சென்றார். திருமதி மார்க்ஸ் வீட்டின் எசமானி என்றால் லென்சென் வீட்டின் சர்வாதிகாரி என்பார்கள். மார்க்ஸின் சாவிற்குப் பின்னர் அவர் தனது சாவுவரை ஏங்கெல்சைக் கவனித்துக் கொண்டார். அவரது சடலம் மார்க்ஸினதிற்கும் அவரது மனைவியினதிற்கும் அருகாகப் புதைக்கப்பட்டுள்ளது. அவருடைய மரணச் சடங்கின்போது ஏங்கெல்ஸ் கூறியதாவது “சிரமமானதும் சிக்கலானதுமான கட்சி விவகாரங்கள் பற்றி அவரது ஆலோசனையை மார்க்ஸ் கேட்பார். என்னைப் பொறுத்த வரை, மார்க்ஸின் சாவிற்குப் பின்னர் நான் செய்ய இயலுமாயிருந்த வேலைகட்கு எல்லாம், மார்க்ஸின் சாவின் பின் என் வீட்டில் வசிக்க வந்து என்னைக் கௌரவித்து தனது இருப்பால் என் வீட்டிற்குச் சூரிய ஒளியும் ஆரோக்கியமும் கொண்டுவந்த அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.”

மார்க்ஸுக்கும் ஜெனிக்கும் பிறந்த ஆறு குழந்தைக ளில் மூவரே உயிர் பிழைத்தனர். அவர்கள் முறையே ஜெனி, லோறா, எலெனொர். மார்க்ஸ் தனது மகள்மாரை மிகவும் நேசித்தார். அவர்களும் அவரை மிகவும் நேசித்தனர். மூவரும் தமது காலத்தில் வாழ்ந்த முக்கிய சோஸலிச வாதிகளை மணம் முடித்தனர். மார்க்ஸின் மனைவியும் அவரது குழந்தைகளும் அவருக்குச் சூட்டிய பட்டப்பெயர் “சோனகன்”. அவரது பட்டப் பெயருக்கான காரணம் அவரது வெண்மை தெளித்த கன்னங்கரேலென்ற தலைமயிரும் தாடியுமாகும். அவரது மீசை கறுப்பாகவே இருந்தது.

மார்க்ஸ் மிகக் கடுமையாக உழைத்தார். “மூலதனம்” அவரது வாழ்வின் 40 ஆண்டுகளை எடுத்துக் கொண்டது என்பர். 1848இல் அவர் ஏங்கெல்ஸுடன் இணைந்து கம்யுனிஸ்ட் அறிக்கையை எழுதினார். அதுவே கம்யுனிசத்தின் மூலக் கோட்பாடுகளைச் சுருங்க எடுத்துரைத்த நூலாகும். அவருடைய புகழின் பெரும் பகுதிக்கு ஆதாரமாயுள்ள “மூலதனம்” 1867 செப்டெம்பர் 14ஆம் நாள் ஹம்பர்க்கில் பிரசுரமானது. அதன் முதலா வது பாகம் மார்க்ஸின் கம்யுனிசப் புனைவுகோளின் சாராம்சத்தைக் கொண்டது. மற்ற இரு பாகங்களையும் எழுதி முடிக்க அவர் உயிருடன் இருக்கவில்லை. எனினும் அவர் எழுதிவைத்த பெருந் தொகையான குறிப்புக்களைத் தொகுத்து இரண்டாம், மூன்றாம் பாகங்களை மார்க்ஸின் சாவுக்குப் பின்பு ஏங்கெல்ஸ் வெளியிட்டார்.

இம்மாபெரும் படைப்புப் போக, இன்னும் பல முக்கியமான நூல்களையும் மார்க்ஸ் எழுதினார். பிரான்ஸில் உள்நாட்டுப் போர், கூலி, விலை, இலாபம் போன்ற சில நூல்கள் உண்மையில் மார்க்ஸ் முதலாம் அகிலத்தின் பொது மன்றத்திற்கு ஆற்றிய உரைகளாகும். பிரான்ஸில் உள்நாட்டுப் போர் பாரிஸ் கம்யூன் நெருப்பிலும் இரத்தத்திலும் நசுக்கப்பட்டதற்கு இரண்டு நாட்கள் பின்னர் லண்டனில் எழுதப்பட்டது. அப்போதோ அதன் பின்னரோ அந்த நிகழ்வுகள் பற்றி அதனிலும் நல்ல ஆய்வு எதுவுமே செய்யப்படவில்லை. சமகால நிகழ்வுகளை ஆய்வதில் மார்க்ஸின் ஆற்றலுக்கு அது ஒரு சான்று. அது அவர் மேதமையின் ஒரு அடையாளம்.

மார்க்ஸ் வெறுமனே ஒரு கோட்பாட்டாளர் மட்டுமல்ல. அனைத்திலும் மேலாக, அவர் தன் காலத்தில் புரட்சிகர இயக்கங்கள் அனைத்திலும் செயலூக்கத்துடன் பங்கு பற்றிய ஒரு நடைமுறைப் புரட்சிவாதியுமாவார். இப்போது முதலாம் அகிலமென்று புகழ்பெற்ற உழைக்கும் மனிதரின் முதலாவது சர்வதேசச் சங்கம் 1864 செப்டெம்பர் 24ஆம் நாள் அவரது தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டது. ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் விஞ்ஞான சோஸலிசச் சிந்தனைகளைப் பரப்பியது இந்த அமைப்பேயாகும்.

மார்க்ஸின் வாழ்வின் பிற்பகுதியில் உடல்நலமின்மை அவரை மிகவும் வாட்டியது. வேறும் பல உபாதைகள் போக, அவருக்கு மார்புச்சளியும் பின்னர் நுரையீரற்சவ்வு அழற்சியும் ஏற்பட்டன. 1881 அளவில் மார்க்ஸும் அவரது

மனைவியும் கடுஞ் சுகயீனமுற்று ஒரே வீட்டில் வெவ்வேறு அறைகளிற் படுத்திருந்தனர். மார்க்ஸ் உடல் தேறினார். அவரது மனைவி 1881 டிசெம்பர் 21ஆம் நாள் புற்றுநோய் காரணமாக இறந்தார். அதன் பின்பு மார்க்ஸ் என்றுமே முன்புபோல இருக்கவில்லை. வீட்டுக்கு வந்த ஏங்கெல்ஸுக்கு ஜென்னியின் சாவு பற்றிச் சொல்லப்பட்ட போது "சோனகனும் இறந்துவிட்டான்" என்று அவர் கூறினார். மார்க்ஸ் மேலும் ஒரு ஆண்டுக்கு வாழ்ந்த போதும், அவர் சொன்னது உண்மையாகிவிட்டது.

மார்க்ஸின் அதிக பிரியத்துக்குரியவரான அவரது மூத்த மகள் ஜெனி, 1883 ஜனவரி 11ஆம் நாள் திடீரென இறந்தது மார்க்ஸுக்குக் கிடைத்த இன்னொரு பேரிடி ஆகும். லண்டனுக்குத் திரும்பிவந்த மார்க்ஸ் மேலும் இரு மாதங்களே வாழ்ந்தார். அவரது இறுதி மாதங்களின் போது அவரது இளைய மகளான எலனோரும் ஹெலனும் அவரைப் பரிவுடன் கவனித்து வந்தனர்.

1883 மார்ச் 14இல் அவர் இறக்கும் வரை ஏங்கெல்ஸ் நாள் தவறாது அவரைச் சந்திக்க வந்தார். அவரது மகள் எலனோரின் வார்த்தைகளில் "சோனகனைப் பொறுத்தவரை, தனது படுக்கை அறையிலிருந்து வெளியேறி மெயிற்லண்ட் பார்க்கில் உள்ள தனது படிப்பறைக்குப் போய்த் தனது கை நாற்காலியில் அமர்ந்து அமைதியாகக் காலஞ்சென்றார்."

மார்க்ஸின் இறுதிக் கணங்களை ஏங்கெல்ஸ் பின்வருமாறு விவரித்தார் "அவரைத் தனியே விட்டுச் சென்று இரண்டு நிமிடங்களும் இராது. நாம் திரும்பி வந்தபோது அவர் தனது கை நாற்காலியில் அமைதியாக நித்திரையாயிருக்கக் கண்டோம். ஆனால் நிரந்தரமாக". மார்க்ஸ் தன் சாவின் போது அமர்ந்திருந்த கை நாற்காலியை ஏங்கெல்ஸ் எடுத்துத் தான் சாகும்வரை வைத்திருந்தார். பின்னர் அது மார்க்ஸின் கடைசி மகள் எலனோருக்கு உரித்தாயிற்று.

மார்க்ஸின் சாவிற்கு ஒருநாள் பின்னர் ஏங்கெல்ஸ் தோழர் ஒருவருக்கு எழுதியது "மனித இனத்துக்கு ஒரு தலை குறைந்து விட்டது. ஆனால் அதுவே நமது காலத்தின் அதி உன்னதமான தலை. பாட்டாளி வர்க்க இயக்கம் தொடர்ந்து செல்லும் எனினும், மேதமையும் நிலைவரம் பற்றிய பூரண அறிவும் வழங்கவல்ல, தெளிவான மறுதலிக்க இயலாத ஆலோசனைக்காகத் தீர்வான கணங்களில் பிரெஞ்சுக்காரர், அமெரிக்கர், ஜேர்மனியர் எல்லாம் வலிய நாடிச் சென்ற மையப்புள்ளி போய்விட்டது. இறுதி வெற்றி நிச்சயமானது. எனினும் தவிர்க்க இயலாத நெளிவு சுழிவுகளும் தற்காலிகமான அங்கும் இங்குமான திசை விலகல்களும் முன்னிலும் வேகமாக வளரும். ஆயினும் நாம் அதைக் கடந்தாக வேண்டும். வேறெதற்காக நாம் இங்கு இருக்கிறோம்? அதனால் நாம் உற்சாகம் இழக்கப் போவதில்லை." மார்ச் 17 சனியன்று ஹைகேற் இடுகாட்டில் தனது மனைவியின் கல்லறையில் மார்க்ஸ் அடக்கஞ் செய்யப்பட்டார். மார்க்ஸின் கல்லறையருகே ஆற்றிய இரங்கலுரையின் முடிவில் ஏங்கெல்ஸ் "அவரது பெயரும் பணியும் காலங்காலமாக நிலைக்கும்" என்றார். அத் தீர்க்கதரிசனம் பொய்க்கவில்லை.❑

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

SOLICITORS

Rengan N Devarajan

Immigration & Nationality

Employment

Land Lord & Tenant

Housing

Welfare Benefits

Matrimonial

Tel : 020 8478 5797
Fax : 020 8478 4486

1st Floor
128 Ilford Lane, Ilford
Essex, IG1 2LE

சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து அப்பாவித் தமிழர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். குறிப்பாக தமிழ்நாட்டில் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என தேசம் சஞ்சிகை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. கடந்த தேசம் இதழ்களில் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தோழர் பாலச்சந்திரனின் நீதிமன்ற வாக்குமூலம் மற்றும் சிலரின் கருத்துக்கள் கவிதைகள் என்பனவற்றை வெளியிட்டிருந்தோம். இவ் இதழில் துறையூர் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் சிவா 17-10-94 அன்று கருர் நீதிமன்றத்தில் வழங்கிய வாக்கு மூலத்தை வெளியிடுகின்றோம். இதன் மூலம் சிறப்பு முகாம் கொடுமைகளை தேசம் வாசகர்கள் நன்கு உணர்ந்து கொள்ளமுடியும்.

## கூண்டிலிருந்து ஒரு குரல்

# நாம் புதைக்கப்படுபவர்கள் அல்ல விதைக்கப்படுபவர்கள்.

மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே!

என்னை 23-8-1991 அன்று போலீசார் கைது செய்தனர். 23-8-1991 முதல் 29-8-1991 வரை விசாரணை என்னும் பெயரில் சித்திரவதை செய்து விட்டு, 30-8-91 அன்று திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர். நான் ஏன் கைது செய்யப்பட்டேன்? என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என்ன? என்பது எதுவும் தெரியாமல், தெரிவிக்கப்படாமல் சிறையில் அடைக்கப்பட்டேன்.

நீதிபதி அவர்களே, நான் சாதாரண மக்களில் ஒருவன். எனக்கு மனைவி, மக்கள் உண்டு. எல்லோரும் போல் நானும் எனது குடும்பத்துடன் அமைதியாக, மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என கனவு காண்பவன். ஆனால் எனது விருப்பத்திற்கு மாறாக நான் தமிழன் என்ற ஒரே காரணத்திற்காக எனது வாழ்வு பறிக்கப்படு மாயின் வேறு வழியின்றி என்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு நான் தள்ளப்படுகின்றேன். 1983 இல் இடம் பெற்ற இனக்கலவரம் எனக்கு இந்நிலையை உருவாக்கியது.

என் கண்முன்னே என் தாய், தந்தையர் சுட்டுக் கொல்லப்பட்டனர். சகோதரிகள் கற்பழிக்கப்பட்டனர். உடைமைகள் சூறையாடப்பட்டன. இவை யாவும் சிங்கள இராணுவத்தால் செய்யப்பட்டது. இதனைத் தடுத்து நிறுத்த என்னைத் தற்காத்துக் கொள்ள வேறுவழியின்றி ஆயுதமேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். காட்டு மிருகங்களால் ஆபத்து வரும் என்று தெரிந்தால் அவற்றை நாம் கொன்று தீர்க்கிறோம். இது சரிதான். இதை தவறு என்று யாரும் கூறுவதில்லை. அதே போல் ஒரு மனிதன் சக மனிதர்கள் மீது காட்டு மிருகத்தைப் போல் பாய்ந்து கடித்துத் தின்ன முயன்றால் அவனை நாம் மிருகத்தைக் கொல்வது போல் கொன்று தீர்க்கத்தான் வேண்டும். நாம் நுளம்பை எதற்காக அடித்துக் கொல்கிறோம்? நம்முடைய உடம்பில் இருந்து அது ஒரு துளி இரத்தத்தைக் குடித்து விட்டது என்பதற்காகத்தானே! எனவே எமது உயிரைக் குடிக்கும் மிருகத்தை எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்? அழித்தொழிக்க வேண்டியது தானே! இவ்வாறு எம்மை அழிக்க வந்த சிங்கள இன வெறி இராணுவத்தை தடுத்த போது சிங்கள இனவெறி அரசால் எமக்கு வழங்கப்பட்ட பெயர் வன்முறையாளர். பயங்கரவாதிகள்.

நாம் யுத்தத்தை விரும்ப வில்லை. நாம் யுத்தத்தை ஒழிப்பதற்காகப் போராடுபவர்கள். ஆனால் யுத்தத்தை யுத்தத்தின் மூலம் தான் ஒழிக்க முடியும். இனவெறி அரசின் துப்பாக்கியை ஒழிக்க வேண்டுமாயின் நாமும் துப்பாக்கி ஏந்துவது அவசியம். நாம் மனித உயிரின் மாண்பினை உணர்ந்தவர்கள். ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை தமிழ் இனமும் அடைய வேண்டுமென்று கனவு காண்கிறோம். அக்கனவை நிறைவேற்ற ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாததாக இருக்கின்றது.

*கோழையாக அஞ்சி வாழ்வதை விட*
*கொடுமைக்கு எதிராக வாளேந்தி*
*மடிவதே மேல்!*
*ஆழ் கிணற்றுக்குள் அடங்கி வாழும்*
*தவளையை விட*
*தீப்பிழம்போடு போராடி மடியும்*
*விட்டில் பூச்சியே சிறந்தது!!*

என்றார் லெபனான் நாட்டுக் கவிஞர் கலீஸ்ஜிப்ரான். இதுவே என் போன்ற இளைஞர்களுக்கு ஏற்பட்ட நிலை ஆகும். இந்நிலையில்

''எமது வீரர்கள் இரத்தம் சிந்தும் போது எமது
இதயம் வருந்துகிறது. எனினும் நாங்கள்
உறுதி தளர மாட்டோம். ஏனெனில் இரத்தம்
சிந்தாமல் நாம் சுதந்திரம் பெற முடியாது''

என்று தமிழ் இனத்தின் மாபெரும் தலைவர் 'பிரபாகரன்' அறை கூவல் விடுத்தார். அவர் கரத்தை வலுப்படுத்துவது ஒவ்வொரு ஈழத் தமிழனினதும் கடமையாக இருந்தது.


இலங்கை இனவெறி அரசு குறிப்பிட்டது போல் இன்று இந்திய அரசும் எம்மை வன்முறையாளர், பயங்கரவாதிகள் என்று குற்றம்சாட்டுகிறது. இவ் வழக்கிலும் என்னை மிகப் பெரிய பயங்கரவாதி என போலீசார் குறிப்பிட்டு உள்ளனர். அதிக பந்தோபஸ்து போட்டு கொடிய வன்முறையாளனை அழைத்துச் செல்வது போல் மக்கள் மனதில் சித்தரிக்க முயலுகின்றனர்.

தமிழ்நாட்டு மக்கள் மனதில் எமக்கு இருக்கும் ஆதரவை அழிப்பதற்காக இவர்கள் ஆடும் இந் நாடகம் ஒரு போதும் வெற்றி பெறப்போவதில்லை.

அன்று எனக்கு பயிற்சி தந்தது இந்திய அரசு,
எனக்கு வெடி குண்டுகள், துப்பாக்கி,
ஆயுதங்கள் எல்லாம் தந்தது இந்திய அரசு,
எனக்கு பணம் தந்தது இந்திய அரசு,
இத்தனையும் செய்து தந்து விட்டு இன்று என்
மீது குற்றம் சுமத்துகிறது இந்திய அரசு.
வேடிக்கையாக இருக்கிறது.

அமைதிப்படை எனும் பெயரில் ஆக்கிரமிக்க முனைந்தபோது அதற்கு இடங்கொடாமல் எதிர்த்ததாலும், இங்குள்ள சில தலைவர்களின் சுயநல அரசியலுக்கு ஒத்துழைக்க மறுத்ததாலும், ஈழப் போராளிகளை கொச்சைப்படுத்த வேண்டும் என்ற போக்கில் இவ்வாறு செய்யப்படுகிறது. மேற்கண்ட விடயங்களுக்கு தக்க ஆதாரத்தை என்னால் விபரமாகக் கொடுக்க முடியும் ஆனால் அவை இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாதது என்று ஆட்சேபிக்க கூடும் என்பதால் அவற்றை இங்கு குறிப்பிடுவதை தவிர்க்கிறேன்.

அன்று எமது போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறிக் கொண்ட இந்திய அரசு இன்று நாம் ஒரு போதும் ஈழப் பிரிவினையை ஆதரிக்கவில்லை எனக் கூறுகிறது. அப்படியாயின் ஈழம் என்னும் தனிநாட்டுத் தீர்மானத்தை மாகாணசபையில் நிறைவேற்றிய வரதராஜப் பெருமாளை பலகோடி செலவழித்து பாதுகாப்பதேன்? தமிழ் ஈழத்தை மறுக்கும் இந்திய அரசு பாலஸ்தீன விடுதலையை அங்கீகரிப்பதேன்? நெல்சன் மண்டேலாவின் ஆயுதப்



போராட்டத்தை ஆதரித்த இந்திய அரசு ஈழப் போராளிக ளின் ஆயுதப்போராட்டத்தை ஆதரிக்க மறுப்பது ஏன்? பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்திற்கு செங்கம்பள வரவேற்பு கொடுக்கும் இந்திய அரசு ஈழப் போராளிகளை பிடித்து பொய் வழக்கு போட்டு சித்திரவதை செய்வது ஏன்? நாம் தமிழர் என்பதாலா? இக் கேள்விகளை தம்மனதில் எழுப்புவதன் மூலம் உணர்வுள்ள ஒவ்வொரு தமிழனும் இந்திய அரசின் சுயரூபத்தை இனங் காண முடியும். இலங்கை இந்திய இனவெறி அரசுகள் மட்டுமல்ல உலகில் உள்ள அனைத்து பிற்போக்கு அரசுகளும் ஒன்று சேர்ந்து எதிர்த்தாலும் எமது தலைவர் பிரபாகன் தலைமையில் தமிழ் இனம் விடுதலையடைந்தே தீரும். இது உறுதி.

அன்று அமைதிப்படை என்று வந்து ஆக்கிரமிப்பு செய்ய முனைந்து தோற்றவர்கள், இன்று அகதியாக வந்தவர்களையும், மருத்துவ சிகிச்சைக்காக வந்தவர் களையும் ஈவு இரக்கம் இன்றி கைது செய்து பொய் வழக்கு போட்டு சித்திரவதை செய்கின்றனர். இவர்கள் மீது வன்முறையாளர், பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துகின்றனர். அது மட்டுமல்ல தமிழகத்தில் வன் முறையை தோற்றுவிக்க வந்தவர்கள் என்றும் பிரச்சாரம் செய்கின்றனர். இவர்களுக்கு ஒன்றை மட்டும் பதிலாக கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் வன்முறை மீது காதல் கொண்ட மனநோயாளிகள் அல்லர். அதேபோல் புரட்சியை ஏற்றுமதி செய்யமுடியும் என்பதிலும் நாம் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர்.

எனவே இவர்கள் இவ்வாறு பழி சுமத்துவது அர்த்தமற்றது என்பதை தமிழ் மக்கள் இனம் கண்டு கொள்வார்கள்.

ஒரு பொய்யை திரும்ப திரும்ப சொல்வதன் மூலம் உண்மையாக்கிவிட முடியும் என்ற நம்பிக்கையில் தம்மிடம் இருக்கும் பாரிய மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் எம்மீது மீண்டும் மீண்டும் இவ்வாறு அவதூறு பொழிவதையே தொழிலாக இந்திய அரசு கொண்டிருக்கிறது. எனக்கு ஒரே ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுமாயின் சகல உண்மைகளையும் வெளிப்படுத்தி இந்திய அரசின் சுயரூபத்தை மக்கள் மத்தியில் அம்பலமாக்க தயாராக இருக்கிறேன். என்னைக் கைது செய்து என்னிடமிருந்து பணத்தைப் பறித்துக் கொண்டதுடன் எவ்வித விசாரணையும் இன்றி தடா சட்டத்தில் அடைத்தனர். அதன் பின் தடா சட்டம் பயன்படுத்துவதற்குரிய காரணங்களைக் காண்பிக்க முடியாமல் வேறு வழியின்றி தடா சட்டத்தை வாபஸ் பெற்றனர். நீதிமன்றம் எனக்கு ஜாமீன் வழங்கியதை தொடர்ந்து என்னை சிறப்பு முகாமில் அடைத்து சட்ட விரோதமாக சித்திரவதை புரிகின்றனர்.

24-7-92 முதல் நான் துறையூரில் உள்ள சிறப்பு அகதிகள் முதாமில் அடைக்கப்பட்டிருக்கிறேன். சிறப்பு முகாம் என்னும் பெயரில் சிறையை விடக் கொடிய சித்திரவதை முகாம்களாகவே இருக்கின்றது. ஏனெனில் சிறையில் கைதிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் சொற்ப சலுகைகள் கூட சிறப்பு முகாமில் மறுக்கப்படுகிறது.

தமிழக அரசால் நடத்தப்படும் இச்சிறப்பு முகாம்கள் என்பது தமிழ் அகதிகளை கொடுமைப்படுத்தும் சித்திரவதை முகாம்கள் என்பது அனைவருக்கும் தெரியும். இச்சிறப்பு முகாம்களில் மிகவும் கொடிய முகாமாக துறையூர் முகாம் இருக்கின்றது.

இம் முகாமில் கணவன், மனைவி பிள்ளைகளை பிரித்து தனித்தனி ஷெல்களில் (சிறைக் கூடங்கள்) அடைத்து வைத்திருக்கின்றனர். கணவன் தனது மனைவி பிள்ளைகளுடன் பேசுவதற்குக் கூட அனுமதிக்கப்படுவதில்லை. தனியாக வைக்கப்பட்டு இருக்கும் இப் பெண்களை இரவு நேரங்களில் தமது அதிகாரத்தை பயன்படுத்தி மிரட்டி மருத்துவமனைக்கு என வெளியே கூட்டிச் சென்று "லாட்ஜில்" வைத்து பாலியல் பலாத்காரம் நிகழ்கிறது. இது குறித்து சம்பந்தப்பட்ட பெண்களே மனுக் கொடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சிறுவர்களை பாடசாலை சென்று படிக்க அனுமதிப்பதில்லை. உறவினர்கள் பார்வையிட வந்தால் அனுமதிப்பதில்லை.

கடந்த இரு வருடங்களாக இத்தகைய சிறப்பு முகாமில் போதிய வெளிச்சம் இன்றிய ஒரு சிறிய "செல்"இல் 24மணிநேரமும் பூட்டியே என்னை வைத்திருக்கின்றனர். உள்ளேயே குளிக்க வேண்டும். மல, சலம் கழிக்க வேண்டும் உள்ளேயே சாப்பிட வேண்டும். இவ்வாறு அடைத்து வைக்கப்பட்டிருப்பதுடன் எவ்வித பொழுது போக்கு வசதியும் செய்து தரப்படாதது உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் எனக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கின்றது. முகாமில் இருக்கும் மற்ற அகதிகளுடன் பேசுவதற்குக் கூட எனக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இங்கு நடக்கும் இக்கொடுமைகள் குறித்து உயர் அதிகாரிகளிடம் முறையிட்டோம். தொடர்ந்து 14 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தோம். எமக்கு இழைக்கப்படும் இக் கொடுமைகளை தடுத்து நிறுத்தக்கோரி பிரதமர், முதலமைச்சர், உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி, தலைமைச் செயலர், மாவட்ட ஆட்சித் தலைவர், ஆகியோருக்கு தமிழ்நாடு இளைஞர் பேரவை, மக்கள் உரிமைக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் ஆகியோர் தந்தி கொடுத்துள்ளனர். ஆனால் எவ்வித பயனும் இல்லை. மாறாக எனது மனைவி பிள்ளைகளின் படங்கள் பறித்துக் கிழிக்கப்பட்டன. எனது உடுப்புகள் செருப்புகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

இது குறித்து நியாயங் கேட்டால் இங்குள்ள பொலீஸ் அதிகாரிகள் எங்களைப் பார்த்து தேவடியா மகனே, மயிராண்டி சிங்களவனுக்குப் பிறந்தவனே என்று சர்வசாதாரணமாக ஏசுவார்கள். ஏன் எங்கள் தாயை அசிங்கப் படுத்துகிறீர்கள்? என்று கேட்டால் அடி உதை விழும். இவ்வாறுதான் 21-12-1993 அன்று உதவி ஆய்வாளர் அன்பழகன் தலைமையில் வெறிபிடித்த பொலீசார் கும்பலாக சேர்ந்து என்னைத் தாக்கியதில் என் கால் முறிந்தது. என்னை மட்டுமல்ல அன்று முகாமில் பலரை இவ்வாறு அடித்து துன்புறுத்தினார்கள். அவர்கள் எவ்வாறு சித்திரவதை செய்தனர் என்பதை கூறுவதற்கு என் நாக்கு கூசுகின்றது. அந்தளவு கேவலமாக கொடுமை செய்தனர். கால் முறிந்து நடக்க முடியாமல் நான் வேதனைப்பட்ட போதும், மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லவில்லை. மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றால் தமது அராஜகம் வெளி உலகத்திற்கு தெரிந்துவிடும் என்ற பயத்தில் ஈவு இரக்கமின்றி அப்படியே கிடக்கவிட்டனர். இன்றும் கூட என் கால்கள் அடிக்கடி வலிக்கின்றது.

எமக்கு இழைக்கப்படும் கொடுமைகள் நாஜிகளின் சித்திரவதை முகாம்களில் நடந்தவையை விடக் கொடியது. இவையாவும் அரசுக்கு தெரிந்தே உயர் அதிகாரிகளினால் நடத்தப்படுகின்றது. இவ்வளவு திமிராகவும், பொறுப்பற்ற முறையிலும் இவ்வதிகாரிகள் நடந்து கொள்வதற்கு அரசே பொறுப்பாகும். எனவே

இவ் அராஜகங்களுக்கு இந்திய அரசம், தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களும் என்றாவது ஒரு நாள் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

கல் ஒன்றைத் தூக்கி தன் காலில் போடுவது என்பது குறிப்பிட்ட சில முட்டாள்களின் செயல்களை வர்ணிப்பதற்கு சீன மக்கள் சொல்லும் ஒரு முதுமொழி. சகல நாட்டு பிற்போக்கு வாதிகளும் இத்தகைய முட்டாள்களே.

> புரட்சிகரப் போராளிகளுக்கு எதிரான அவர்களின் அடக்கு முறைகள் அனைத்தும் இறுதியாக ஆராய்ந்து பார்த்தால் மக்களின் புரட்சிகளை பரந்த அளவில் மேலும் தீவிரமான அளவில் வளர்ப்பதற்கு துணை செய்வதாகவே அமைகின்றன. இதேபோல் இலங்கை இந்திய அரசுகள் எம்மீது மேற்கொள்ளும் அடக்குமுறைகள் யாவும் தமிழீழ மக்களின் விடுதலைக்கு உறு துணையாகவே இறுதியில் அமையும்.

எம்மை பிடித்து அடைத்து சித்திரவதை செய்வதன் மூலமோ அல்லது எம்மைக் கொன்றுகுவிப்பதன் மூலமோ ஈழப் போராட்டத்தை நசுக்கிவிட முடியும் என இந்திய அரசு காணும் கனவு ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை. ஏனெனில்

நாம் புதைக்கப்படுபவர்கள் அல்ல.
விதைக்கப்படுபவர்கள்.

எம்மில் இருந்து ஆயிரமாயிரமாய் முளைத்தெழுவர். துண்டு துண்டாய் எம்மை வெட்டி எறிந்தாலும் பொங்கும் அலையாய் மீண்டும் மீண்டும் எழுந்து வருவோம். இறுதி வெற்றி உறுதி எமக்கு.

மேலும் நீதிபதி அவர்களே உங்களிடம் ஒரு பணிவான வேண்டுகோள் விடுக்கிறேன். இவ்அராஜக வாதிகளால் நான் படுகொலை செய்யப்படலாம். அவ்வாறு நான் மரணமடைய நேரிட்டால் எனது கண்களை தமிழ் நாட்டில் யாராவது ஏழைத் தமிழ் சிறுமிக்கு வழங்க வேண்டும். அத்துடன் எனது உடலை தமிழ் நாட்டில் உள்ள ஏதாவது ஒரு மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்க வேண்டும் இதுவே எனது கடைசி விருப்பமாகும்.

''வீழ்வது நாமாக இருப்பினும்
வாழ்வது தமிழாக இருக்கட்டும்''

நன்றி.❑

புத்தம் புதிய கணணிகள் £199 முதல்
உங்கள் தேவைகளுக்கு ஏற்ப
வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

**Viveq Computers**

Tel : 020 8422 3422

155 Greenford Rd
Sudburry Hill
HA1 3QN

## தேசம் சந்தாப் படிவம்

சந்தாவை அனுப்பி தேசத்தை உங்கள் இல்லங்களுக்கே வரவழையுங்கள்.


காசோலையை 'Thesam' என்ற பெயருக்கு வரையவும்.

THESAM. P O Box 35806, E11 3JX, London, UK.

Name :
Address :

E-mail :
Tel :

ஆறு இதழ்களுக்கு : UK £10 US $25 EUR 20


PUT A CROOK AWAY
CALL CRIMESTOPPERS
ANONYMOUSLY
YOU COULD GET A CASH REWARD
நேர்மையற்ற ஒருவரை
அப்புறப்படுத்தவும்
பெயர் கொடாது
அழைக்கவும்
நீங்கள் ஒரு
விருதைப் பெற முடியும்
0800
555
111
London
CRIMESTOPPERS
0800 555 111

1. ஏப.4ல் ஒரு சமூகப் போராளியின் அரசியல் அனுபவங்கள் என்ற தலைப்பிலான சந்திப்பு பரிஸில் இடம் பெற்றது. இல.இடதுசாரி இயக்க செயற்பாட்டாளர், தீண்டாமை ஒழிப்பு வெகுஜனக் கழகத்தின் முன்னோடி க தங்கவடிவேல் (படம்) அவர்களின் நினைவுகள் பகிரப்பட்டு கலந்துரை யாடலும் நடந்தது. திருமலை மகளீர் அமைப்பு உறுப்பினர் பிலோமினா லோரன்ஸ், வன்னியசிங்கம் தர்மகுலசிங்கம் ஆகியோரும் அதில் கலந்துகொண்டனர்.




2. சனாதனனின் ஓவியங்கள் சந்திப்பு, கலந்துரையாடல் ஏப்.11 எட்மன்டனில் இடம்பெற்றது. யுத்தம், அது சமூகத் தில் ஏற்படுத்திய தாக்கங்கள், தனி மனித உணர்வுகள், சமூகவுணர்வுகள் ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் ஓவியங்கள் (சிலைட்ஸ்) அமைந்து இருந்தது. தமிழர்களின் வரலாற்றைத் தாங்கி நிற்கும் அரும்பொருட்கள் தென் இலங்கை வர்த்தகர்களுக்கு சில ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுவதும், ஆலயங்கள் அரும்பொருட்களை விற்று நவீனமயமாக்கப்படுவதும் நடக்கிறது.



3. மானிப்பாய் இந்துக்கல்லூரி ப.மா.ச இன் 'பொங்கும் பொழுது 04' 29 மே மாலை ஆறு மணிக்கு இல்போர்ட் ரவுன்ஹோலில் நடைபெற உள்ளது. ராகாஸ் இசைக்குழுவின் (படம்) இசைத் தென்றல், மாதினி சிறீஸ்கந்தராஜாவின் இசைக்கச்சேரி, காலாபூசனம் வீரமணி ஐயருக்கு சமர்ப்பண நடனம், தேசம் சஞ்சிகை இன் வெளியீடான செல்வராஜாவின் 'Rising From the Ashes' நூல் அறிமுகம் ஆகியன இடம்பெறவுள்ளது.




4. கனவுகள் நிஜமானால் பெருமளவு காட்சிகள் இலண்டனிலும் சில ஸ்கொட்லாந்திலும் படமாக்கப்பட்டு உள்ளது. பதினெட்டுக்களில் உள்ள கயிலி சிவக்குமார் கதாநாயகியாக அறிமுகமாகிறார். 'மாற்று' இயக்கிய புதியவன் இயக்கும் இப்படத்தினை கொமர்சியல் டைரகட் ரவிக்குமார் தயாரிக்கிறார். ஒளிப்பதிவு பொபி (படம்). இசை வேந்தன். ஸ்கிறீன் பிளே கஜேந்திரா. படத்தின் இறுதிக்கட்டத் தொகுப்பும், விசேட தாக்கங்களும் தமிழகத்தில் செய்யப்பட உள்ளது.

